
# நாவலர் நாடகம்

517

11292



நாவலர் பெருமான்

ஓம் சிவம்

# நாவலர் நாடகம்


இயற்றியவர்:-
கவியோகி மகரிஷி
சுத்தானந்த பாரதியார்

ஆத்மஜோதிப் பதிப்பகம்,
நாவலப்பிட்டி.

உரிமை ஆசிரியருக்கே.

விலை. ரூபா 2.00

அச்சுப் பதிவு:-
ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.



மகரிஷி சுத்தானந்த பாரதியார்

# பதிப்புரை

சைவமும் தமிழும் இரு கண்கள் எனப் போற்றியவர் நாவலர் பெருமான். அவரது தொண்டு அன்று இல்லாவிட்டால் என்பதை நினைக்கும்போது நாம் சைவராகவோ தமிழராகவோ இருந்திருக்க முடியாது என்றே சொல்ல வேண்டியுள்ளது. நாவலர் பெருமான் சைவக் காவலர் என்றும், ஐந்தாம் குரவர் என்றும் போற்றப்பட்டவர். கற்றவர்கள் மாத்திரமே அவரது பெருமையை உணரமுடிந்தது. பாமர மக்களும் நாவலர் பெருமானை அறிய வேண்டும். உலகமும் அறியவேண்டும். அப்போதுதான் நாவலருடைய வீறு உலகம் முழுவதும் பரவும்.

இத் திருத்தொண்டினைச் செய்ய மகரிஷி சுத்தானந்த பாரதியார் அவர்கள் முன்வந்துள்ளார்கள். நாவலர் சரிதத்தை நாடகமாக்கி நடிக்க வேண்டும் என்பது சுவாமிகளுடைய அவா. அதன் பேருக யாவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நாவலர் பெருமானின் திவ்ய சரித்திரத்தை நாடகமாக்கித் தந்துள்ளார்கள். அதனைப் பொதுமக்களுக்குப் புத்தகஉருவில் கொடுப்பதில் ஆத்மஜோதிஅச்சகம் மிகமகிழ்வடைகிறது. சுவாமிகளுடைய தமிழ்த் தொண்டினுல் ஈழமும் வாழ்வடைகிறது என்பதை மகிழ்வுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேம்.

நாவலர் பெருமானின் நாடகத்தை வெளியிடுதலில் மிக ஆர்வம் கொண்டவர் நாவலர் பெருமானின் பரம்பரையில் தோன்றிய உயர் திரு அ.சபாபதிப்பிள்ளைஅவர்களாவர். அவர்இலங்கைப் புகையிரதப் பகுதியில் உதவிப் புகையிரத நிலைய அதிபராகக் கடமை ஆற்றுகின்ருர். சைவப் பற்றும் தமிழ் ஆர்வமும் கொண்டவர்; உணர்ச்சி


மிக்கவர். நாடகம் வெளிவருவதற்குக் கணிசமான பொருளுதவி புரிந்தவர். இப்படிப்பட்ட அபிமானிகள் முன் வந்தால் சைவமும் தானே வளரும். இந் நாடகம் வெளிவருவதில் திரு. சபாபதிப் பிள்ளையவர்களுக்கும் தமிழகம் பெரிதும் கடமைப் பட்டுளது.

சுவாமிகள் நாவலர் பெருமானை உலகறியச் செய்வதில் முனைந்துள்ளார்கள். நாவலர் சரிதத்தை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். அத் தொண்டும் நிறைவேறி உலகம் நாவலர் பெருமானை அறியும் சந்தர்ப்பத்தை அளிக்குமாறு எல்லாம் வல்ல பரம்பொருளை வழுத்துவோமாக.

நாவலர் பெருமான் நாடகத்தை அச்சேற்றிக் கொண்டிருக்கும்போது, அதன் அச்சுப் படிவங்களை ஊன்றிப் படித்து வந்தவர்களில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் மிக முக்கியமானவர்களாவார்கள். நாடகம் அச்சேறி முடிந்ததும் முன்னுரை அளிப்பதாகக் கூறியிருந்தார்கள். திருக்கேதீஸ்வரப் பெருமானின் சித்தம் வேறாகி விட்டது. அதனால் அவருடைய முன்னுரையைப் பெற்றுக் கொள்ள முடியாமலேயே நாடகத்தை வெளியிடுகின்றோம். நாவலர் பெருமானின் நாடகத்தை வெளியிடுதல் மூலம் அவருடைய ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ்ப் பெருமக்கள் இதனை ஆதரித்து எம்மை ஊக்குவிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

**ஆத்மஜோதிப் பதிப்பகத்தார்,**
**நாவலப்பிட்டி.**



நாவலர் பெருமான் நாடகம்

வெளிவருவதற்கு முக்கிய காரணஸ்தராக இருந்த

**திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்கள்.**

# நாவலர் நாடகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமிழும் சைவமும் செய்த தவத்தால் தோன்றிய ஐந்தாம் குரவர். அவர் செய்த அருட்பணியும் அறிவுப்பணியும் அற்புதம்! அற்புதம்! நாவலர் வரலாற்றை "நாவலர் பெருமான்" என்ற பெருநூலாகச் செய்தோம். மூன்று ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து அந்நூலை யாத்தோம். அதற்காகிய ஆதாரங்களைத் தேடும்பொழுது நாவலரைப் பற்றி எத்தனையோ அருமையான நிகழ்ச்சிகளைக் கண்டோம்.

நாம் இலங்கையைச் சுற்றிச் சிவத்தொண்டு பரவும்போது நாவலர் வரலாற்றை நாடகமாக்கித் தரவேண்டினர் நல்லன்பர். நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தில் இந்த நாடகம் உருவானது.

நமது திருநெறிச் சைவத்தை உலகம் அறிந்து பயில வேண்டும். நமது சமயத்தின் அருமை பெருமைகளை நிலை நாட்ட வேண்டும். அதற்காக நாவலர் செய்த அரிய பெரிய தொண்டுகளை அனைவரும் கண்டு கருத்தோங்க வேண்டும் என்றே இந்நாடகத்தை எழுதினோம். இதில் திருவருள்பெற்ற தேவார திருவாசகப் பாடல்களையே கோத்துள்ளோம். இந் நாடகத்தைப் படிப்பதும், நடிப்பதும், பார்ப்பதுமே சிறந்த சமய விளக்கமாகும். இந் நாடகத்தைத் திரைப்படமாக்கி நாவலரை உலகறியச் செய்தல் வேண்டும். எல்லாம் திருவருளிச்சை!

இந்நூலுக்குச் சைவப்பிரகாச நாவலர் என்று முதலில் பெயர் வைத்திருந்தோம். அன்பர் "*நாவலர் நாடகம்*" என்பதே தெளிவாயிருக்கின்றது என்றனர். கருத்தும் நன்றாயிருக்கின்றது, நாமலரால் சிவபெருமானை வணங்கி அகத்தே அவனருளை நாடிக் கூடும் அன்புவழியை இந்நாடகம காட்டுகின்றது. இந்நாடக பாத்திரர் சமயப் பற்று நிரம்பியவரா

யிருக்க வேண்டும். பண்ணும் பயனும், பதமும் இதமும் அறிந்து நடிக்க வேண்டும். உலக நாடகத்தை நடத்தி உயிர்களை இயக்கும் நடராஜப் பெருமானை உள்ளத்திற் கொண்டு நடிக்க வேண்டும். இந்நூலின் வருவாய் மாணவர் நலத்திற்கே செல்லும்.

அம்மையப்பன் அருட்பெருஞ் ஜோதியான்
எம்மையாளும் இறைவன் குபேரன்
தம்மைத் தந்தவர் தாபம்தணிப்பவன்
செம்மலரடியைத் தினம் சேவிப்பாம்.

யோக சமாஜம்,
சென்னை-20.

சுத்தானந்த பாரதி

# நாடக பாத்திரர்

1 ஞானப்பிரகாசர்
2 குருக்கள்
3 நாவலர்
4 சிவகாமியம்மையார்
5 தில்லைநாயகம்
6 அண்ணல் தியாகு
7 மிஸ்டர் நவீனம்
8 விசுவநாதபிள்ளை
9 பீட்டர் பார்சிவல் துரை
10 தெய்வ சிகாமணிப் புலவர்
11 கந்தமடப் பிரபு
12 அம்பலவாண தேசிகர், 13 சுப்பிரமணிய தேசிகர், 14 தாண்டவராயசுவாமிகள், 15 மீனாட்சி சுந்தரம்பிள்ளை, 16 பொன்னுசாமித் தேவர், 17 முத்துராமலிங்கசேதுபதி, 18 பொன். இராமநாதன், 19 குன்றக்குடி ஆதீனம்.
20 தவசிப்பிள்ளை சாமிநாதன்
21 துவைனன் துரை
22 திருவண்ணாமலை ஆதீனம்
அடியார், பொதுஜனம்.

# 1 திருவாக்கு

(சிதம்பரம் நடராஜா சந்நிதி ஞானப்பிரகாசர்
தேவாரம் பாடுதல்)

**ஞானப்பிரகாசர்:—**

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின்ருடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன் சடை நின்மலனை
மஞ்சாடு மலை மங்கை மணுளனை
நெஞ்சே நீ நினையாய்.

ஆக்கையாற் பயனென் - அரன்
கோவில் வலம் வந்து
பூக்கை யா லட்டிப் போற்றியென்ஞதஇவ்
ஆக்கையாற் பயனென்?

**குருக்கள்:—** (மலர் தூவிக் கொண்டு)

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

(தீபாராதனை காட்டுதல்)

எல்லோரும்:-

ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம் ஓம்
சிவஜோதி சிவஜோதி ஜயஜோதி ஓம் ஓம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

ஞானப்:— அடியார்க்கருளும் அம்பலக் கூத்தனே, உலகம் இருண்டது; மாந்தர் உள்ளம் வரண்டது; தமிழுலகம் தாழ்ந்தது; சைவம் வீழ்ந்தது; கோவில் புகுவாரில்லை; நாவாரத் தேவாரம் பாடுவாரில்லை; திருவாசகத் தேனைப் பருகுவாரில்லை. சிவனைச் சிந்திப்பாரில்லை. பர சமயம் படர்ந்தது. பறங்கியர் மாயத்தில் உறங்கினர் தமிழர். உடைகளிற் புதைந்து, ஊன் கள்ளுண்டு, வாய்ப் புகைகக்கி, வயிற்றடிமையாகித் திரியும் தமிழர் மீள்வதென்றோ! அந்தோ பதியறியாப் பசுக்கள், பசுக்கொலையில் பங்கு கொண்டனரே......வீட்டுக்கொரு பசுவாம்—பறங்கியர் உண்ணவாம்......அந்தப் பழிக்கஞ்சி யாழ்ப்பாணத்தை நீத்தேன்; தூக்கிய திருவடி நிழலடைந்தேன். அப்பனே, அன்புச் சைவம் தழைக்க ஒரு

ஞானசம்பந்தனை அருளாயோ? அப்பர் வாராரோ! அருள் வள்ளலே தமிழும் சைவமும் உய்ய வழி துலக்காயோ......?

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் எனைக்
கண்டு கொள்ளே.

**அசரீரி:-** [ஆகாசவாணி கேட்கிறது.] ஞானப் பிரகாசா, நின் தவம் பலித்தது. நின் மரபில் சிவக்கனல் ஆறுமுகமாகத் தோன்றும். ஐந்தாங் குரவர் வருவார். தமிழும் சைவமும் தழைக்கும். நினது தவம் பலிக்கும்.

**ஞானப்:-** வணக்கம், வணக்கம் கருணை வள்ளலே.

நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

**குருக்கள்:-** [ஆவேசமாக] ஞானப்பிரகாசரே! நீர் சிவயோகி; பறங்கியர் கொடுமையைக் குமைத்தீர்; பசுக்கொலை மறுத்தீர்; ஊரை நீத்தீர்; தில்லை வந்தீர்; அருணகிரி சேர்ந்தீர்; காசியில் கற்றீர்; அறிவு நூல் அருளினீர்; சிவபுண்ணியம் பல

செய்தீர்; இங்கே தாமரைக் குளமெடுத்தீர். உமது தவம் பலித்தது. உமது ஆவியே ஐந்தாங் குரவராய் அவதரிக்கும்—சைவ நெறி தழைத்தோங்கும்.

**ஞானப்:—** *[நால்வர் சிலை முன் வணங்கல்.]*

*பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல்போற்றி*
*ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி*
*வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி*
*ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி.*

**எல்லாரும்:—**

*வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க! மன்னன்*
*கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!*
*நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!*
*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.*

**சிற்சபேசா! சிவசிதம்பரம்!**

# 2. தாய் சிவகாமி

***[நாவலர் வீடு – தாய் சிவகாமி முருகனை வழிபட்டு]***

**தாய்:—**

*அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக்*
*கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன்னிரண்டும்கொண்டே*
*ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.....*

ஆறுமுகமே ஒருமுகமாகி, பன்னிரு திருமுறைகளே இரு கைகளாகி இந்தச் சிவயோகியாக வந்தான் - ஞானப்பிரகாசர் தவமே சைவப் பிரகாசமாக வந்தது......(**முருகனுக்குத் தீபாராதனை காட்டி**) சிவமுருகா எல்லாம் நின் செயல்......

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான் பின்செல்வேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே!

(**தில்லைநாயகம் வருதல்**: சட்டை தொப்பியுடன் ஆவேசமாக நடனமாடி)

**தில்லை:—** நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன். நினையா தொரு போதும் இருந்தறியேன். தாயே, தாயே! அறிந்தேன். உணர்ந்தேன். கண் திறந்தது! பரசமயப்பாழ் ஒழிந்தது. புத்தி வந்தது சக்தி வந்தது.

**தாய்:—** அப்பா, தில்லை! நேர்ந்ததென்ன? நேற்று வரையில் நீ தொப்பித் துரையாகி, எங்களை அஞ்ஞானி என்றாயே. திருநீற்றைச் சாணிப் பூச்சென்றாய், திருவாசகத்தை விட்டாய் ...வயிறு வளர்க்கச் சட்டை தொப்பி போட்டாய்......

**தில்லை:—** இதெல்லாம் நேற்றைக் கதை தாயே...

**வஞ்சகம் ஒப்பது இது! கண்டறியேன்**
வயிற்றோடு துடக்கி முடக்கியிட

வயிற்று வேடம் ஒழிக! சட்டை தொப்பி ஒழிக! (எடுத்து வீசுகிறான்) தாயே நின் கையால் திருநீறு தா!

தாய்:— (நீறு தந்து) சிவா, ஷண்முகா, முருகா, அப்பா! நமது சமயம் பெரிது. அதை அறிதல் அரிது. பரசமயத்தில்மயங்காதே!

தில்லை:—

*நஞ்சாகி வந்தென்னை நலிந்ததனை*
*நணுகாமற் றுறந்து கரந்து மிடீர்*
*அஞ்சேல் எனுமீர் அதிகைக் கெடில*
*வீரட்டானத் துறை யம்மானே.*

தாய்:— அப்பா! தில்லை உன்னை இப்படி மீட்டது யார்?

தில்லை:— தாயே ஆறுமுகன் என்னைக் காத்தான். நின் மகன் வரம் பெற்ற புலவன். சைவந் தழைக்க வந்த அருட்புலவன். அன்று அப்பரும் சம்பந்தரும் பாடினர். இன்று ஆறுமுகம் பேசினான். சிவகாந்தம் வீசினான். எமது நெற்றியில் நீறு பூசினான்.

*கல்வியில் வரம்பு கண்டோன்*
*கடவுண்மாக் கலைக ளெல்லாம்*
*வல்லவன், பிரமச்சாரி,*
*வானெனத் தமிழ் பொழிந்து*
*செல்வமுந் திருவும் ஓங்கச்*
*சிவநெறி செழிக்க வந்தோன்*
*நல்லவர் போற்று நல்லூர்*
*நாவலன் வாழ்க மாதோ!*

தாயே! தங்கள் செல்வன் சிவக்கனல்மைந்தன்! ஆறுமுகன் இன்றேல் நீறெங்கே? நான்மறை நூல்களெங்கே? சிவமெங்கே? நீரெங்கே? நானெங்கே? தமிழெங்கே? தமிழகமெங்கே?

தமிழினைப் புதுக்க வந்த
தத்துவப் புலவன் என்கோ!
தமிழ்ப்பணி தனை மணந்த
தவமணிச் சைவன் என்கோ!
தமிழிசை பரவ வந்த
தாரகக் குழலே என்கோ!
அமிழ்தினும் இனிய சொல்லோன்
அழகிய நாவலோனே!

**தாய்:—** எல்லாம் முருகன் செயல். ஆறுமுகம் வேறு நினைவில்லாது சிவம் தமிழ் என்று திரிகின்றான். எப்போதும் சேனாதிராயர் வீட்டில் ஏடுகளைப் புரட்டி எழுதிக் கொண்டிருக்கிறான். சரவணப் புலவருடன் ஆராய்ச்சி நடத்துகிறான். பாதிரிக்குத் தமிழ் போதிக்கும் போதே நமது சமய உண்மைகளையும் போதிக்கிறான். உடம்பைக் கவனிப்பதில்லை. பாரப்பா இன்னும் உணவுக்கு வரவில்லை...நீ சென்று அழைத்து வருகிறாயா ஆறுமுகத்தை.

**தில்லை:—** அம்மா! இன்றொரு பெரிய கூட்டத்தில் ஆறுமுகம் பேசினான். அந்தப் பேச்சு உள்ளத்தைத் தொட்டது. பிறகு சேனாதிராயர் வீட்டுக்குச் சென்றான். அங்கு பெரிய புராண ஆராய்ச்சி நடந்தது.

**(பின்னால் நாவலர் குரல்......**பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ)

**தாய்:—** ஆறுமுகம் வந்து விட்டான். நான் உணவு படைக்கிறேன்.

**தில்லை:—** (அவரை வணங்கி) நான்சென்று வாரேன்.

**(எல்லோரும் உள்ளே செல்லல்)**

# 3. உள்ளொளி பெருக்கும் உத்தமன்

**பாத்திரங்கள்:-** *தாய், ஆறுமுகம், தில்லைநாயகம்.*

**(ஆறுமுகம் செம்பட்டணிந்து, விபூதி ருத்திராக்ஷத்துடன், திருவாசகம் பிடித்து வருதல்)**

**ஆறு:—** *பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே!*

**தாய்:—** *ஆறுமுகம், வந்தாயா......அகாலமானது. சோறு ஆறிப் போனதே. இப்படி ஊணுறக்கமின்றி உழைத்தால் உடம்பு என்னுவது?*

**ஆறு:—** *தாயே, என் மனம் ஆறவில்லையே! தமிழர் தமிழை மறந்து, சிவநெறி கெட்டலையும் அலங்கோலத்தைக் கண்டால் மனம் கொதிக்கிறது தாயே......ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர். திருமூலர், சேக்கிழார், காரைக்காலம்மையார் முதலியோர் நமக்குச்சேர்த்து வைத்த அருட்செல்வங்கள் உறங்குகின்றன! பன்னிரு திருமுறைகள், சைவசாத்திரங்கள், திருப்புகழ், கந்தபுராணம் எல்லாம் படிப்பாரின்றி, படித்தாலும் கேட்பாரின்றிக் கிடக்கின்றன. தமிழ் மறை*

கிறது; அதைத் தமிழர் மறக்கின்றனர். அந்தக் காலம் பரசமயத்தைத் தகர்த்து சிவக்கொடிநாட்டிய ஞானசம்பந்தக்கனல் என்னுள்ளத்தைப்பற்றியது, தாயே எனக் கெப்படி உறக்கம் வரும்? சிவப்பசியே என் பசி - தமிழும் சைவமும் உய்ந்தாலே என் பசியாறும்......பரமத மயக்கமொ ழிந்து தமிழன் சிவமயமாக வேண்டும்.

**(வருதல் - சிவக்கோலத்துடன் தில்லைநாயகம்)**

**தில்லை:—**

குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமான
நலம் பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன்; நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப் பெரிதும் பேசமாட்டேன்
இலம் பொல்லேன் இரப்பதல்லால் ஈயமாட்டேன்
என் செய்வேன் தோன்றினேன் ஏழையேனே

என் கண்ணைத் திறந்த கருணையே வணக்கம்- இனி என் வாழ்வெல்லாம் சிவபுண்ணியமாக அருள் புரிய வேண்டும்.

**ஆறு:—** தில்லைநாயகம் இனி நீர் ஜான் இல்லையே.

**தில்லை:—** இல்லை ஜான் கான் (gone)

**ஆறு:—** இந்த விபூதிக் கோலம் மாருதே......பக லில் பாழ் நெற்றியும் இரவில் விபூதியும் அணியும் போலித்தனம் மீளுமா? வயிற்

றடியார் போடும் வான்கோழி வேடம் நிற்குமா?

**தில்லை:—** நில்லாது, சிவம் மாருது, நமக்கு உறுதி நமச்சிவாயமே.

**ஆறு:—** சிலர் என்முன் விபூதியணிவர்; அங்கே அடிமைச் சிறையில் அழிப்பர்; அல்லது பேய் திருநீற்றைப் பூசியதாகப் பொய் சொல்லி அழிப்பர். இந்தப் பாசாங்கை ஒழிப்பீரா?

**தில்லை:—** ஆம் ஆம்.

**ஆறு:—** பாதிரிமார், உமக்குத் தட்டுத் தட்டாகத் துண்டுப் பிரசுரங்களைத் தந்து விநியோகிக்கச் சொன்ணர்களே.

**தில்லை:—** துண்டுகள் தூண்டு சுடரில் எரிந்து சரிந்தன. பல கட்டுகளை நானே கல்லைக் கட்டிக் கிணற்றில் போட்டு எல்லாம் விநியோகமானதாகப் பாதிரியிடம் பொய் சொல்லித் தப்பினேன். ஒருமுறை எனது தந்தை முருகனுக்குப் படைத்த சோற்றை எற்றி விட்டேன். அவர் பாதிரியிடம் சொன்ஞர். ''சுவாமி இவர் அஞ்ஞானி-பேய்க்குச் சோறுபடைத்தார் உருட்டிவிட்டேன்'' என்றேன்.

**ஆறு:—** பாதிரி உமக்குப் பத்துரூபா அதிகச் சம்பளம் தந்தாராக்கும்.

**தில்லை:—** ஓம் ஓம் எப்படித் தெரிந்தது.

**ஆறு:—** இப்படி ஒவ்வொரு நாளும் நடக்கிறதே. யாழ்ப்பாணத்துச் சமயநிலை என்ற இந்தப் பிரசுரத்தைப் படித்துப் பாரும்...

**தில்லை:—** உத்தரவு - அடியேனுக்குத் தொண்டு குறிக்க வேண்டும்.

**ஆறு:—** இல்லை, நீ ஆங்கிலத்தில் ஊறிப்போய், இன்றுதான் தமிழே பேசுகிறாய். நீ முதலில் தமிழை முறையாகக் கற்று வா. அதற்காகவே சைவ சமாஜம் நாட்டி, சைவ பரிபாலன பாடசாலையும் நடக்கின்றது. அதில் சேர்ந்து முதலில் பாலபாடம் படி. பிறகு இந்தா சைவ வினுவிடை படி!

**தில்லை:—** உத்தரவு. விடை பெறுதும் ஓம் சிவம்.

**(வணங்கிச் செல்லல்)**

**தாய்:—** ஆறுமுகம், இனி உணவு கொள்......

**ஆறு:—** (உண்ணும் போதும் திருவாசகமும் பஞ்சாட்சரமும் முரல்கிறார்.) ஓம் நமச்சிவாய; சிவோஹம்; சிவாய நம; நமச்சிவாய வாழ்க - நாதன்தாள் வாழ்க......

*ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து*
*தேனார் அமுதமாய் தீங்கரும்பின் கட்டியுமாய்*
*வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்*
*தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்*
*ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்*
*கோனா' நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்.*

(கை கழுவி வந்து, திருநீறுபூசி, வாயில் போட்டு)

**தாய்:—** அப்பா, உடம்பைக் கவனி.

**ஆறு:—** உடம்பின் பயன் உள்ளத்தானைக் காண்பதே.

**தாய்:—** எல்லோருக்கும் உடம்புதான் பெரிதாய் இருக்கிறது. உத்தமன் உணர்வே இல்லையே, வழி என்ன?

**ஆறு:—** அம்மா, அப்பர் சுவாமிகள் அருளுகிறார் கேளும்.

உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே.

**தாய்:—** ஞானத் தீ எல்லாருக்கும் புலப்படுமா... அதற்கேற்ற சாதனம் வேண்டுமே. நாங்களும் பூவைத் தூவுகிறோம், கற்பூரம் காட்டுகிறோம், சிவமுருகா என்று போற்றுகிறோம், மனம் ஒன்று விட்டொன்று பற்றி ஊசலாடுகிறதே......

**ஆறு:—** தாயே அப்பர் அருமையாகப் பாடுகிறார்.

காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக

நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டி
பூசனை ஈசனர்க்குப் போற்றவிக் காட்டினேமே.

விளங்குகிறதா?

**தாய்:—** ஆம் அப்பா. உடம்புதான் கோவில்; உளத்தில் விளங்கும் சிவமணி இலிங்கம்; உண்மையான ஒழுக்கமே ஆசாரம். அன்பான நேயமே பால் - நெய் அபிஷேகம், மனநிறைவே நீர் முழுக்கு. துதித்தலே நிவேதனம். எப்போதும் சிவமயமாய் இருத்தலே ஈசன் பூசை . பாழும் மனம் இந்தப் பூசை நிறைவேறுமல் அலைகிறதே அதைப் பண் படுத்தும் வழி என்ன?

**ஆறு:—** அப்பர் நமது மனத்தை உழுது பண் படுத்துகிறார்.

மெய்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே.

இது தாம் நாம் செய்ய வேண்டிய வேளாண்மை.

**தாய்:—** நீ நிரம்பப் படித்தவன்......சேனதிராயர் புத்தகசாலை முழுதும் உன் மூளையில் ஞான நடம் புரிகிறது.

ஆறு:— அடடா...எல்லாம் அருளமுதம் அம்மா. பாதிரி வேலை கூட புளித்தது . திருமுறை நூல்களில் திளைக்கும் உள்ளம் - அடிமை வேலையை விரும்புமா...

தாய்:— ஆனுல் அங்கும் உனக்கொரு கடமை உள்ளது. தம்பி நீதானே பைபிளை மொழி பெயர்க்கிருய்......

ஆறு:— ஆம் அம்மா...பைபிளைப் படிக்கும்போது திருக்குறள் புலப்படுகிறது. தெய்வ நிலை பெறும் வாழ்வை திருக்குறள் எவ்வளவு அருமையாக விளக்குகிறது. அன்பேஉயிர், மாசற்ற மனமே அறம், அறமே இன்பம் என்கிருர் வள்ளுவர்.

**(பின்னுல்...கதவு தட்டல்...அம்மா, அம்மா..)**

தாய்:— அண்ணன் தியாகு...இதோ வந்து விட்டேன்......

ஆறு:— வீண் பேச்சு வேண்டியதில்லை. நாம் திருவாசகம் படித்துக் கொண்டிருப்போம்.

## 4. மிஸ்டர் நவீனம்

**பாத்திரங்கள்: மிஸ்டர்நவீனம், ஆறுமுகம், தியாகு**

**(சட்டை தொப்பியுடன் நாவலர் வீட்டுத் திண்ணையில் பைபிள் படித்தல். எச்சிலைத் தொட்டுப் பக்கங்களைத் திருப்புகிருன்.)**

**நவீனம்:-** *சேசுநாதர் மலைமேல் ஏறி - பாவிக ளுக்கு உபதேசிக்கிறார். அஞ்ஞானிகளே கேளுங்கள்... (யாரும் கேட்கவில்லை - இரண்டு காதே கேட்கிறது.) இந்த அறிக்கைகள் அப்படியே இருக்கின்றன. கடலலைகளுக்குத் தருவோம் ..... இந்த வீட்டில் ஓர் அஞ்ஞானி நமது பிழைப் பைக் கெடுக்கிறான்... இன்னொரு அஞ் ஞானி நமது பக்கம் வயிற்றைத் திருப்பு கிறான்.* **(பிடில் இழுத்துப் பாடி)**

*லலம் - லம் லம் லம் - லம் - லம் லம் லம் லாலலா!*

*வீசையா - உன்னொளி - சேசையா*
*நேசையா - ஆசியைப் பேசையா*

**(கதவைத் தட்டுகிறான்......டாகு டாகு.. கதவு திறக்கிறது...அண்ணன் தியாகு வருகிறான்...)**

**தியாகு:-** *குட் நூன் மிஸ்டர் மாத்யூ நவீனம். ஷேக் ஹாண்ட்.*

**நவீ:-** *குட் நூன் ஷேக் ஹாண்ட் மை டியர் டாகு...*

**(மனதில் இனித் துரைத் தமிழில் பேசவேண் டும். அதுதான் நமது தொப்பிக்கழகு)**

*என்ன மிஸ்டர் உங்கல் டம்பி டமில் டேவாரம், டிடுவாசகம்* **(சுருட்டுப்புகைத்து)** *டிடுத்தாண்டகம் (திருத்தாண்டகம்) பாடி அஞ்ஞானிகளை சாம்பலாண்டியாக்கிறான்,*

டுரைக்கு கன கோபம். டம்பி இப்படி யாரு அண்ணனுக்கும் டுரை கோபம் ரொம்ப ரொம்ப வரும்...வேலே போகும்.

தியாகு:- கோவிக்காதீங்க மிஸ்டர் நவீனம். தம்பிக்குப் புத்தி சொல்லித்தான் வருகிறேன்.

நவீ:- புத்தி புத்தி புட்டி..... (புத்தி) உனக்கும் டே(தே)வாரப் புட்டி! (புத்தி) நெட்டி (நெற்றி) யிலே சாம்பல்.. ஹை டுரை பாத்தா பலெய அஞ்ஞான பலக்கம் போ வெலியே என்பார் அலி அலி அலி **(திருநீற்றை எச்சிலைத் தொட்டு அழிக்கப்போகிருன். ஆறுமுகம் பாய்ந்து வருகிருன்.)**

ஆறு:- நிறுத்து. அண்ணு.. என்ன செய்யத் துணிந்தாய்? கந்தப்பிள்ளை மகனே திருநீற்றை எச்சிலால் அழிக்க விடுவது.. ஏ பஞ்சாட்சரம் பிள்ளை மகனே, பரமசிவம் பிள்ளையே, இன்று மாத்யூ ஆகித் தமிழைக் கொலை செய்யும் பாவியே தொப்பி போட்டால் நீ பெரிய மனிதனே.. **(தொப்பியைத் தட்டி விட்டு)** கேள்.

திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்
தீவண்ணா திறமொருகால் பேசாராகில்
ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணுராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாராகில்
அளியற்றூர் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலிய பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றூரே.

தியாகு:- தம்பி சும்மா இரு. இவர் துரைக்குக் கண்ணுனவர். இவராலேதான் எனக்கு

வேலை கிடைத்தது. மாதம் ஐம்பது யார் தருவார்? ஆங்கிலம் படித்தாய். ஆங்கிலப் பாதிரிக்கு ஆசிரியரானுய்; பைபிளை மொழிபெயர்த்தாய் - இன்னும் பழைய பஞ்சாட்சரமாயிருக்கிருயே...

**ஆறு:-** புதிய பஞ்சாட்சரம் உண்டோ? சம்பளம் அடிமைவேலை – இதுதானே உன் பஞ்சாட்சரம்?

**நவீ:-** புடிய பஞ்சாட்சரம் கேல்.. சு வி சே ச ம் சே சு நா த ர் ப ர ம பி தா தெரியுமா? ஹல்லோ டேவாரம்! கல்லை டொலும் கண்மூடியே நாங்கல் கடவுலைத் தொலுவோம்.

**ஆறு:-** உனது கொலைத் தமிழில் உளறுவதெல்லாம் உளறித் தீரு. பிறகு சொல்லுவோம்... பழைய மரபை விட்டு......

**நவீ:-** பலைய பலைய என்ன மான் பலைய மரபு அப்படிப் பூசி, இப்படி வைச்சு குடுமி நீட்டி ஹ ஹ ஹ எலி வால் மாதிரி வேட்டி கட்டி டுண்டு போட்டு சாணி பூசி சிவம் சிவம்னு சவம் பன்னி பெரியபுராணம் படிச்சு கந்தபுராணம் கதறி முர்த்தா முருகா ஷொள்ளி கர்த்தரை மறந்து, கல்லை வணங்கி கட்டையை வணங்கி...

**ஆறு:-** நிறுத்தையா நம:சிவாயம் மகன் பரமசிவம் பிள்ளையாரே பஞ்சத்திற்குப் பகல் வேடம் போட்டவரே தூய சிவநெறியை அறியாது தெரியாது பேசுகிருய். வயிற்றடிமையாகி மாதாவை மறந்தாய்...

நவீ:- ஹே எங்கல் மதமே மதம்! எங்கள் கடவுலே கடவுல்

ஆறு:- அஞ்ஞானியே..... கடவுள் எல்லாருக்கும் ஒன்று! அவரை அடையும் அன்பும் எல்லாருக்கும் பொது; அன்பும் சிவமும் ஒன்று. எல்லா உலகமும் ஆனாய் நீயே! ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என்பது எங்கள் சித்தாந்தம். அது உலகச் சமயம்.

தலையானை எவ்வுயிர்க்கும் தான் ஆனானை
தன் உருவம் யாவர்க்கும் அறியவொண்ணா
நிலையானை நேசர்க்கு நேசன் தன்னை
நேராதார் நன்னெறிக்குச் சேராதாரே

நவீ:- ஹ ஹ ஹா ஹ ஹ (கேலிராகம் இழுத்து) அண்டயானை, இண்டயானை, டானானை, நானானை, என்ன மான் யானை? சேசுமேல் வை பாசமே... (பிடில் இழுத்து)

ஆறு:- ஈசன் மேல் வை நேசமே.

நவீ:- கட்டையும் அடா - கல்லையும்
விட்டுவா அது — நல்லதே
சாணியைப் பூச நாணுவாய்

ஆறு:- நிறுத்து பாட்டை. சாணியும் கட்டையும் உம் மூளையில். சாணிக்கும் விபூதிக்கும் வேற்றுமை தெரியாத வீம்பனே கேளும். சிலுவையும் கட்டையே. அதை ஏன் வணங்குகிறீர். உமக்கு ஒருபைபிள். எமக்கு ஆத்திசூடி முதல் திருக்குறள்

வரையில் எத்தனையோ நன்னூல் உண்டு. நீஅழுக்குடம்பில், சட்டைதொப்பி போட்டால் வேர்வை நாற்றம் போகுமா? நாங்கள் புனித நீராடி, புனித நீறு பூசி, புனிதக் கடவுளை, ஜீவனுடன் கலந்த சிவனை நெஞ்சார வணங்குகிறோம். கடவுள் அரு என்பது எங்களுக்கும் தெரியும்.

அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே

சொல், மனம் கடந்த சுத்த பரமாத்மனை நாங்கள்தியானத்தாலும்கலந்துநிற்போம். மனமானது ஒருமை கொள்ள ஓர் உருவிலும் வணங்குவோம். எங்களுக்குவழிகாட்டும் குரு மூர்த்தமாகவும் வணங்குவோம். இதோ சைவவினாவிடை. இதோ பெரிய புராணம் - படி. சொல் சிவநாமம்.

**நவீ:-** என்ன மான் டாகு நீ சும்மா இருக்கிறாய்!

**தியா:-** தம்பி, தம்பி, பேசாதே. இதெல்லாம் துரை கேட்டால் வேலை போகும்; பிழைப்புப் போகும். காலத்திற்கேற்ற கோலம் வேண்டும். **(விபூதியை அழிக்கிறான்.)**

**ஆறு:-** அண்ணா அஞ்சாதே. அப்பரைக் காத்த ஆண்டவன் இருக்கிறான். ஐந்தெழுத்து நம்மைக் காக்கும். சம்பந்தரை நினை... பூசு திருநீறு ..

(பூசுகிறார்)

தியா:- அட சட். பூசாதே...

நவீ:- அப்படிச் சொல்லு... (**சிலுவை போட்டு**) கர்த்தரே இந்த அஞ்ஞானியின் மனம் மாறட்டும்.

ஆறு:- (அண்ணு நெற்றியில் நீறு பூசி)

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

நவீ:- (முகச்சாயத்தை எடுத்து) சுந்தரமாவது பௌடர் துதிக்கப்படுவது பௌடர்.

ஆறு:- (நவீனம் நெற்றியிலும் இட்டு) வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு

நவீ:- (அலறுகிறுன்) பேய் பேய்...ஐயோ பேய்

ஆறு:- சொல் பஞ்சாட்சரம். நம:சிவாய பேய் போகும்.

நவீ:- டாம் ..மாட்டேன்.

ஆறு:- உன் அப்பன் பெயரென்ன?

நவீ:- நம:சிவாய

ஆறு:- சவாசு! அதுதான் பஞ்சாட்சரம். சொல் நூறு தரம்.

நவீ:- மாட்டேன். அப்பன் அஞ்ஞானி.

**ஆறு:-** நீர் ஞானியோ! போலியே வா இப்படி..

**நவீ:-** மாட்டேன்! உன்னிடம் வந்தால் என் வேலை போகும். நீ சோறு போடுவாயா?

**ஆறு:-** அட ஒரு வயிற்றுச் சோற்றுக்கா பரசமய அடிமையானாய்! இப்படிப் போனாய்... **(சிவனே இவனைத் திருத்து. விபூதி தூவுகிறார்.)**

**நவீ:-** ஐயோ பயமாயிருக்கிறது. துரையிடம் ஓடு. ஓடு டாகு டாகு.

**ஆறு:-** போ துரையிடம் நானும் வருகிறேன். அண்ணா சிவனை மறவாதே...சைவத்தைத் துறவாதே!

**நவீ:-** ஓடு டாகு. அழி சாணியை. **(கைக்குட்டையால் அழித்துக்கொண்டே ஓடுதல்)**

**ஆறு:-** தியாகு இனி நீ என் அண்ணன் இல்லை.

*கல்லார் சிவகதை; நல்லோர் தமக்குக் கனவிலும் மெய்*
*சொல்லார்; பசித்தவர்க்கு அன்னம்கொடார்குருசொன்னபடி*
*நில்லார்; அறத்தை நினையார்; நின்நாமம், நினைவிற் சற்றும்*
*இல்லார், இருந்தென் இறந்தென் புகல் கச்சி ஏகம்பனே.*

**(செல்லல்)**

# 5. சர்ச்சில் கூட்டத் தொழுகை

**பாத்திரங்கள்:- பார்ஸிவல், ஆறுமுகம், நவீனம்.**

**(பாடசாலே மண்டபத்தில் ஒளிவளரும் சிலு வைமுன் அன்பர் பிரார்த்தனே செய்தல். நவீனம் கண்ணீர் வடித்தல். பர்ஸிவல் பாதிரி பிரார்த் தனேயை நடத்துகிருர். பாட்டுடன் பியாஞே முழங்கு கிறது. ஆறுமுகம் ஒரு மூலேயில் ஜபமாலே உருட் டிக் கொண்டே கவனிக்கிருர்.)**

பொதுத் தொழுகை: எல்லோரும் மண்டியிட்டு

*பரம பிதாவே! பரம பிதாவே!*
*பாவிதனேக் கண் பாரும்*
*பரிந்தும தருளேத் தாரும்*
*வரமிகு திருக்குமாரனே யிங்கனுப்பி*
*வாஎரசைக் கொண்டாநீம் - எங்கள்*
*வாழ்வினுக் கமைதியைச் சேரும்*

**பார்ஸிவல்:-** *பரலோகத்திலிருக்கும் பரமபிதாவே எங்கள் பாவங்களே மன்னித்து அருள் புரியும். சிலுவையில் திருக் குமாரன் சிந்திய இரத்தம் எங்கள் இதயத்தில் இரக்கத்தை எழுப்பட் டும். சிலுவையில்எங்கள்கருத்தர்பட் டதுயரம் எங்கள் மனதில் தியாகத் தை ஊக்கட்டும். பரமபிதாவே உன் பெருமை பொலிக! உன் அரசு வருக! உன் அருள் பொழிக! உன் அன்பு நிறைக! எங்கள் வாழ்வு உன் இச்சை வழி செல்க. ஆமன்.*

**ஆறு:-** (மனதுள்) ஈசனே நீ அல்லதில்லை. இங்கு மங்கும் எங்குமே பேசினேனோர் பேதமின்னம் பேதையேன் என் எம்பிரான் எம்பிரானே. இவரெல்லாம் எம்மவரே; இத்தனை பேரும் பிறமதம் புகுந்ததேன்!

**பார்ஸி:-** (தொழுகை முடிந்து வந்து) வணக்கம் குருவே.

**ஆறு:-** ஓம் சிவம்

**பார்ஸி:-** பண்டிதரே, நீர் எங்கள் வணக்கத்தில் கலந்து கொண்டீரா?

**ஆறு:-** உள்ளாரக் கலந்து கொண்டேன். பரமனை உள்ளக் கோவிலில் பரவினேன். அங்கும் இங்கும் எங்கும் அவனே.

**பார்ஸி:-** எங்கள் கோயில் எப்படி?

**ஆறு:-** அமைதி, அணி, அழகு, ஒழுங்கு நிரம்பியிருக்கிறது.

**நவீ:-** உமது கோயிலில் பாடும் டம் டம் டம் டும் டும் டும் தை தா த .. எங்கள் கோயிலில் சட்டம். உங்கள் கோயிலில் சத்தம்

**நாவலர்:-** எங்கள் கோவிலில் மனச் சுத்தம்... அன்பின் உருக்கம் உண்டு. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம். அன்பின் வழியது உயிர்நிலை; அறத்தால் வருவதே இன்பம். அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்.. இந்தக் கொள்கையே எங்களை நடத்துகிறது.

(வகுப்பு மணியடித்தல்)

பார்வலி:- (கடிகாரம் பார்த்து) மணி அழைக்கிறது. வகுப்பில் சந்திப்போம். குருவே வணக்கம். (செல்கிறார்)

நவீ:- இந்த அஞ்ஞானச் சாம்பலைப் பூசி விட்டீர்...என் வயிற்றிலடித்தீர். சம்பளத்தில் ஒரு ரூபாய் போய்விட்டது....

நாவ:- சம்பளம் - இதுதானே உங்கள் பஞ்சாட்சரம். வாரும் பேசலாம். இந்தா இன்னொருதரம் பூசு...மந்திரமாவது நீறு

நவீ:- ஐயோ பேய் . (ஓடுதல்)

ஆறு:- நாமும் துரையிடம் செல்வோம்.

(பார்வலிவேல் பாதிரி தமிழ் பைபிளை ஊன்றிப் படித்தல், நவீனம் முழந்தாளிட்டு சிலுவை போடல்.)

பார்வலி:- பைபிள் தமிழாக்கம் பார்க்க,பார்க்க ஆறுமுகனார் தமிழ் இனிது இனிது.

நவீ:- (நெற்றியை அழித்துக் கொண்டு) தந்தையே... இந்த அஞ்ஞானிகல் பைபிளில் சாம்பலடித்திருப் பார் கல். கவனம் அடைச் சொல்ல வண்டேன்.

பார்வலி:- அப்படியில்லை. பாஸ்டர் மாத்யூ, மழவை மகாலிங்கர் போன்ற புலவர் இதைப் போற்றினர். (ஒரு பக்கம் பார்த்து)

''உன்னுள் உண்ணரசைப் பெறு; மற்ற தெல்லாம் தாமே கூடி வரும்...'' நன்று யிருக்கிறதே .

நவீ:- வின்னரசைப் பெறவொட்டாது அஞ் ஞானி டடுக்கிறுன். (நெற்றியைத் தடவு தல்)

பார்வதி:- ஏன் நெற்றியைத் தடவுகிறுய்.. .. ஆ... இதென்ன. காதோரம் சாம்பல். ஹை .. வேஷமா? வீட்டில் சாம்பல்; இங்கே சிலுவை போடுகிறுயா? இன்னம் பழைய பூச்சு விடவில்லையா ஹ...ம்.

நவீ:- மன்னிப்பு ம ன் னி ப் பு. உண்மையே... அண்ட அஞ்ஞானி பூசிவிட்டான். டன்னி போட்டு அலிட்டேன். (மறுபடி அழித்து) பரமபிடாவே என் நெட்டியில் ஒட்டிய சாம்பலை அலியும் அலியும்

பார்வதி:- அலிட்டேன் . .. டண்டை. வண்டேன். நெட்டி. இதென்ன தமிழ். அழி அலி யானதேன்?

நவீ:- டுரை முன்னே டுரை போல சட்டை டொப்பி போட்டு டமில் பேசினேன்... டாம்ஸன் டுரை இப்படியே பேசுவார்.

பார்வதி:- பாஸ்டர் மாத்யூ நவீனம், இந்த டன்னித் தமிழை ஒழியும். எங்களை மட் டமாக நினைக்க வேண்டாம். எங்கள் ஆசாரப்படியே சட்டை தொப்பி போடு வோம். உங்கள் இலக்கணப்படியே தமி

ழும் பேசுவோம். தமிழனுகிய கிறீஸ்து வன் டமில் பேசத் தேவையில்லை. இனி மையான தமிழே பேசலாம். ஆங்கிலத் தைப் போலவே தமிழையும் நாம் திருத் தமாகப் பேசுவோம். எம் ஆசிரியர் ஆறு முகப் புலவர் என்பதை நினையும். சுருட்டு விட்டுக் கொண்டு 'டுரை' என்ருல் நீர் துரையாவீரோ?

**(ஆறுமுகனுர் இப்போது கதவு மறைவில் நின்று கேட்கிறுர்.)**

**நவீ:-** மன்னிப்பு மன்னிப்பு. இந்த அஞ்ஞானி களுக்கு இப்படிப் பேசினுலே மடிப்புப் பிடக்கிறது.

**பார்ஸி:-** மதிப்பு மடிப்பானதோ - சைசை! பிறக் கிறது பிடக்கிறதோ! சை சை! திருத் தமாக உளறும்! ஐரோப்பியர் என்ருல் சட்டை, தொப்பி, சுருட்டு, மாட்டுக்கறி, சாராயப் புட்டி, டமிலென்று நினைத்தீர் போலும்! தமிழுக்கு அரிய பெரிய சேவை செய்தவர் ஐரோப்பியப் பாதிரிமார் என் பதை மறவேல். நாம் தொகுத்த அக ராதி தமிழகம் எங்கும் வழங்குகிறது. போப்பயரின் இலக்கணம், வீரமாமுனி வரின் தேம்பாவாணி, கால்டுஸல்லின் ஒப்பியல், புதுவை பெத்திசெமினரியில் வெளியிட்ட அளவற்ற நூல்கள் எங்கள் சேவையை எடுத்துக் காட்டும். தமிழ கத்தில் முதன்முதல் அச்சகம் நாட்டி நூல் வெளியிட்டவர் பாதிரிமார். புனிதர் ராபெர்ட் நோயிலி மதுரையில் அற்புதம்

செய்தார். அவரை அந்தணரும் வணங்கினர். திருச்சி, மதுரை, பசுமலை, பாளையங்கோட்டை, சென்னை நகரங்களிலும் இதே யாழ்ப்பாணத்திலும் பாதிரிமார் செய்யும் தொண்டுகளைப் பார். எத்தனை பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள், எத்தனை மாதா கோவில்கள், கன்னியில்லங்கள், எத்தனை தொழில்நிலையங்கள் சிலுவை தாங்கி நிலவுகின்றன. இதையெல்லாம் எடுத்துச் சொல்லி நீ ஆட்களை ஞானஸ்நானத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

**ஆறு:-** (மனதுள்) பரமபதியே நாங்களும் எங்கள் சமயத்திற்கு இப்படிப் பணி செய்யும் காலம் வரவேண்டும். ஓம் சிவம்,

**நவீ:-** புனிதத் தந்தையே, அஞ்ஞானிகளுக்கு அப்படியே சொல்லி வருகிறேன். ஏசுநாதர், எங்கள் கருத்தர் பட்டபாடெல்லாம் படுகிறேன். அஞ்ஞானிகள் முன்னே மந்தைமந்தையாக வந்தனர். ஆனல் இப்போது.

**பார்வலி:-** (கடிகாரம் பார்த்து) தில்லைநாதன் ஞானஸ்நானத்திற்கு வரவில்லையா இன்னும் ..

**நவீ:-** தந்தையே அவன் கந்தசாமி குளத்தில் ஸ்நானம் செய்து சாம்பல்பூசி, உருண்டை மாலை போட்டுப் பேயை ஜபிக்கிறுன்.

**பார்வலி:-** உன் உபதேசம் அழுத்தமாயில்லை. உனக்குத் தரும் சம்பளம் வீண்... ஹ . டிஸ்மிஸ்

நவீ:- கேளும் தந்தையே உமது திருவடி பற்றிச் சொல்லுகிறேன். (பூட்சை முத்தமிடல்) இப்படி எத்தனையோ பேரைத் தடுத்தான் அந்த ஒருவன். எனக்குச் சாம்பலடித்த ஆறுமுகம். அவன் பேச்சில் எல்லாரும் மயங்கினர்.

பார்வலி:- சின்னப்பன் எங்கே?

நவீ:- சிவன் கோவிலுக்குப் போய்ப் பெரியப்பனுகித் தேவாரம் பாடுகிறுன்.

பார்வலி:- உன் உபதேசம் பலமாயில்லை.

நவீ;- துரையே, தந்தையே, தயாளுவே - தூக்கத்தில் கூட உபதேசம் செய்கிறேன். ஒரு அஞ்ஞானி எல்லாரையும்கவர்ந்தான்.

பார்வலி:- யார்? நமது புலவரா? அவருடன் யார் இருப்பது?

நவீ:- ஒரு பெரிய சிவக் கூட்டம் அந்தச் சிவப்பிரகாசரைக் காந்தம் போலப் பின்பற்றுகிறது. பிரமசாரி சதாசிவம் அவருக்கு வலது கை. இவருக்குக் கையும் பையுமாகப் பல செல்வர் உதவுகிறுர். பொன்னம்பலம்பிள்ளை, சுவாமிநாதர், செந்தில்நாதர், விசுவநாதர், கனகசபாபதிப்பண்டிதர், கதிரைவேலர்.

பார்வலி:- இந்த வேலை சாமுவேலர் ஆக்க முடியாத நீர் பாஸ்டரா?.. ஹம் நம் அறிக்கைகள் என்னவாயின.

நவீ:- அறிக்கைகளை வீடு வீடாகத் தந்தேன். தெருத் தெருவாகத் தந்தேன். தந்தையே பலசரக்குக் கடைகளிலும் பல்லுப்பொடிக் கட்டிலும் அவற்றைக் கண்டேன்.. துரையே அபாயம் அபாயம் ஆறுமுகம் அபாயம்.

பார்ஸி:- அப்படியா! நமது பைபிளைத் தமிழாக்கிய ஆறுமுகனரா? இப்படி எழுந்தார்?

நவீ:- இன்னும் கேளும் தந்தையே! ஆறுமுகம் சைவப் பிரகாசரானர்; சைவ சமாஜம் கண்டார்; சைவ பாடசாலை நடத்துகிருர்; சைவப் பிரசாரம் செய்கிருர்; சைவ பரிபாலன அச்சகம் நாட்டினர்...எல்லாம் நம்மைப் போல். நமக்குப் பலமான போட்டியாக எழுந்தார்.

பார்ஸி:- நம்மிடம் கண்டதைச் செயலாக்கித் தம் மதம் வளர்க்கிருர்... இன்று வரட்டும்.

ஆறு:- (ஆத்திரத்துடன் எழுந்து விரைவாக) துரையே வந்தேன், கேட்டேன் - செல்கிறேன். (செல்லல்)

(பார்ஸிவல் ஓடிச் சென்று)

பார்ஸி:- குருவே குருவே . வருக! வருக! புலவரே வருக - (வணக்கமுடன்) பாடம் படிப்போம்.

ஆறு:- நம:சிவாயம்பிள்ளை மாத்யூ நவீனம் உமக்குச் சொல்லும் பாடம் போதுமே ... எமக்கும் அது நல்ல பாடம் புகட்டியது.

**பார்ஸி:-** *நீர் வந்தது தெரியாது. குருவே நாங்கள் எத்தனையோ மதவிஷயமாகப்பேசுவோம். அதை நீங்கள் மறைந்திருந்து கேட்க லாமா?*

**ஆறு:-** இன்று கேட்கிறோம். இன்னும் எத்தனை எத்தனையோ நாளாகவே கேட்டுக்கொண்டு தான் ''அஞ்ஞானிகள்'' என்று.

*பரமபதுவ்ய எம வாழக்கை இப்படி வீணு வதா? துரையே இன்று முதல் எமது சமயம், எமது தாய் மொழிக்கே வாழ் வோம். வேறு ஆசிரியரை ஏற்பாடு செய்து கொள்ளும்.*

**பார்ஸி:-** *புலவரே, உம்மைப் போன்ற செம்மையும் புலமையும் சொல்லுரமும் நெஞ்சுரமும் யாருக்குண்டு? நாங்கள் உம்மிடம் கற் றவை பல ... வாரும் குருவே வாரும்.*

**ஆறு:—** இனி நாளை தான் - பாட நேரத்திற்கு வந்தோம். நீர் பேசியதெல்லாம் காது கேட்டது. நாம் ஒற்றுக் கேட்க வரவில்லை. திருவருள் இப்படிப்பட்ட நிலையை உண்டு பண்ணி எங்கள் உணர்ச்சிக்கு எழுச்சியீந் தது . பாட நேரம் முடிந்தது. செல்கி றோம்.

**பார்ஸி:-** மன்னியும் புலவரே-நாளை ஐந்து மணிக்கு எதிர்பார்க்கிறேன்.

ஆறு:- சரியாக - ஐந்து - மணி. (செல்லல்)

# 6. நவீன விநோதம்

நவீ:- (தனியே சிந்தித்தல்)

அதுவுமில்லே இதுவுமில்லே ஆண்டவா
அங்குமில்லே இங்குமில்லே ஆண்டவா
பொதுவுமில்லே தனியுமில்லே ஆண்டவா
பொன்னுமில்லே புகழுமில்லே ஆண்டவா

பரமபிதாவே என் பிழைப்பு இப்படியானதே; இங்கே அஞ்ஞானிகளே என்றல் ஆஷாடபூதியே என்கிறார்கள். அங்கே ஞானஸ்நானத்திற்கு ஆள் சேர்க்காவிட்டால் டாம் பூல் என்கிறார்கள். இரவில் என் மனைவிக்குப் பயந்து சிவ சிவா என்று திருநீறு பூசுகிறேன். பகலில் துரைக்குப் பயந்து விபூதியை அழிக்கிறேன். இந்த ஆறுமுகம் மறுபடியும் சாம்பலடித்து சாம்ப சிவ சிவா என்கிறான். எப்படியோ ஒரு துளி ஒட்டிக் கொண்டிருந்தால் துரையின் டாம் இடியற் என் மானத்தைப் பிளக்கிறது. ஆறுமுகக் கூட்டம் பரசமயக் கோளரியாகக் கிளம்பியிருக்கிறது. நான் ஏன் மதம் மாறினேன்? நானும் அவருடன் சேரவா? பிழைப்பு! சுளை சுளையாக இருநூறு ரூபா யார் தருவார்கள்! சாம்பார் சோறும் சம்பல் சிவாவும் போதுமா .. தினம் ஐந்து வயிறு சாப்பிட வேண்டுமே .. நமக்கு அஞ்செழுத்து சம்பளம் - பசிவயிறு.

அகரமுதல எழுத்தெல்லாம் - என்றன்
வகுறு முதற்றே யுலகு.

(வருதல் ஆறுமுகஞர்)

ஆறு:- என்ன பஞ்சாட்சரம்பிள்ளை வயிற்றுப்பஞ் சாட்சரத்திற்குப் புதிய குறள் உருவா னதோ?

நவீ:- கருத்தரே இந்த ...ஞானியிடமிருந்து என் னைக் காரும்.

ஆறு:- என்ன பஞ்சாட்சரம் நல்ல தமிழ் பேசு கிருய் - ஏசுநாதர் கட்டளையோ.

நவீ:- பார்ஸிவல் துரை கட்டளை..... அப்ப நீ அம்மநீ அண்ணநீ தம்பிநீ அன்புடைய மாமனும் மாமியும் மைத்துனனும் நீ சாமுவேலே பார்ஸிவேலே ஹாஹாஹா

ஆறு:- இதென்ன புதுத் தேவாரம்......

நவீ:- கலியுக வரதன் பார்ஸிவேலே
காப்பாற்றும் தெய்வம் சாமுவேலே

ஆறு:- இதென்ன பரவசம் பிய்த்துக் கொண்டது?

நவீ:- ஆம். இந்த ஒரு சாண் வயிற்றுக்காகத் தான் வடிவேலை விட்டுச் சாமுவேலைப் பிடித்தேன். செந்தில் வேலை விட்டுச் சிலுவை வேலைப் பிடித்தேன். ஆறுமுக ஞரே என் வயிற்றைக் காப்பாற்றும். பரமபிதாவே இவனிடமிருந்து என் நெற் றியைக் காப்பாற்றும்.

ஆறு:- பஞ்சாட்சரம் இப்போது நெற்றியை விட்டு விடுகிறேன். நாவைப் பிடித்துக் கொள்கிறேன். சொல் தேவாரம். சொல்.

நவீ:- துஞ்சும்போது சுடர்விடும் சோதியை

ஆறு:- சைசை. கசடா இதுவா சோதி. (சுருட்டுப்பற்ற வைக்கிறுன்.) போடு கீழே .. (தட்டிவிடுகிறுர்) பிடிக்காதே புகை! சொல் நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை

நவீ:- (கடிகாரம் பார்த்து) நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை. (நாழியாய் விட்டது)

ஆறு:- நஞ்சு கண்டத்தடக்கிய நம்பனை

நவீ:- ஒரு சந்தேகம். கண்டத்திலே ஏன் நஞ்சை அடக்க வேண்டும். சாக்கலேட், பெப்பர்மென்ட் அடக்கினுலென்ன?

ஆறு:- கேளப்பா. ஏசுநாதர் சிலுவையால் வருந்தியதேன்?

நவீ:- நாமெல்லாம் சிலுவை நிழலில் உத்தியோகம் பார்த்துப் பிழைக்கத்தான்.

ஆறு:- அப்படியில்லையப்பா . பிறர் பாப பரிகாரத்திற்காக ஏசுநாதர் செய்த தியாகம் அது. அது போல உலகையே அழிக்க வந்த ஆலகால விஷத்தைச் சிவன் உண்டு எல்லார்க்கும் உயிர்ப்பிச்சை அளித்தார். அது தியாகம். அதை நினைப்பூட்டவே அவர் கண்டம் நீலமானது.

நவீ:- சரி - தெரிந்தது - தேவாரத்தை முடியும்.

ஆறு:- நஞ்சு கண்டத்தடக்கிய நம்பனை
வஞ்சனேன் இனி நான் மறக்கிற்பனே

நவீ:- .. நான் மறக்கிறபனே......சரி போதும். என்னை விட்டுவிடும்.

ஆறு:- வா நானும் துரையிடமே போகிறேன்.

நவீ:- தயவு செய்து என் நெற்றியில் கைபோடாதே. தேவாரம் வேண்டுமானால் பாடு. ஆனால் பாபமன்னிப்புத் தருபவர் எங்கள் திருக் குமாரரே...பயந் தீர்ப்பவர் பரமபிதாவின் பாலகனே

ஆறு:- எங்கள் திருக்குமாரர் பாபமே கிட்ட வராமல் விரட்டுவார் கேள்.

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகா என் றோதுவார் முன்.

சொல். வெற்றிவேல் வீரவேல்

நவீ:- உமக்குப்பயந்து சொல்லுகிறேன். வெற்றிவேல் வீரவேல் சாமுவேல் அடடா துரை பங்களா வந்து விட்டது. அதோ துரை நிற்கிறார். **(நெற்றியை அழித்துக்கொண்டு சிலுவை போட்டுக் கொண்டு ஓடுதல்)** சாமுவேல், இம்மானுவேல்.. ஹெயில் ஹெயில் பாதர், பார்ஸிவேல் - பார்ஸிவேல் பார்ஸிவேல் **(முன்னே ஓடுதல்)**

# 8. கடமை என் உரிமை

**(பாதிரியார் வீடு - ஆறுமுகம் தேவாரம் பாடி வருதல் - பார்ஸிவேல் வணங்கி வரவேற்றல்)**

**ஆறு:-** *நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்*
*நமச்சிவாயவே நானறி விச்சையும்*
*நமச்சிவாயவே நாநவின் றேத்துமே*
*நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.*

**நவீ:-** **(முன்னால் ஓடி வந்து)** *குட் மார்னிங்...*

**பார்வதி:-** *(முன்னே ஆறுமுகனாரை வணங்கி)* **வணக்** *கம் குருவே வருக அமர்க.*

**நவீ:-** **(திகைத்து துரைக்குப் பின்னால் சலாம் போடல்)**

**பார்வதி:-** *மாத்யூ நீ இன்று கந்தசாமி கோயில்முன் தேரடியில் நின்று இந்த அறிக்கையைப் படித்து விளக்கு*

**நவீ:-** **பாபமன்னிப்பு** - *அஞ்ஞானிகளே எங்கள் கர்த்தர் உங்களுக்காக...*

**பார்வதி:-** *டாம் அங்கே போய்ப் படி...*

**நவீ:-** **(கட்டைத் தூக்கிக் கொண்டு செல்லுதல்)** *எங்கள் கர்த்தர் இரத்தம் வடித்தார்...* **(போதல்)**

**பார்வதி:-** *குருவே இனி நாம் திருக்குறள்படிப்போம். மக்கட்பேறு முடிந்தது.*

**ஆறு:-** *தந்தை கடமை என்ன?*

**பார்வதி:-** *தந்தை மகற்கு ஆற்றும்நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்.*

**ஆறு:-** மகன் கடமை என்ன?

**பார்வதி:-** மகன்தந்தைக்காற்றும்உதவி இவன்தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்

**ஆறு:-** அங்கே நன்றி - இங்கே உதவி. இதன் சிறப்பென்ன?

**பார்வதி:-** தான் நலமோங்கி வாழத் தந்தையளித்த அறிவாற்றலைப் பயன்படுத்தி உலகிற்கு உதவியாக மகன் வாழவேண்டுமென்பது

**ஆறு:—** தமது சமயம், பண்பு, பண்பாடுகளுக்கு உதவியாக மக்கள் வாழ வேண்டுமென் பதாம். அதற்கு அன்பு அறம் இரண்டும் உயிர்த்துடிப்புகள். எங்கள் மாணிக்கவா சகர் இன்பமே என்பெரும் அன்பே என் றார். அன்பும் அறமும் இல்லறத்தின் பண்பும் பயனும் என்றார் நாயனார்.

**பார்வதி:-** நன்று நன்று. மக்கட் பேற்றிற்குப் பிறகு நாயனார் அன்பை வைத்தார். எங்கள் பைபிளும் அன்பையே அடிப்படையாகக் கொண்டது.

**ஆறு:-** எல்லாச் சமயங்களும் அன்பையே அடிப் படையாகக் கொண்டன. ''அன்பிலார் தம்மைக் கண்டால் அம்ம நான் அஞ்சு மாறே'' என்றார் எங்கள் மாணிக்கவாச கர். அன்பின் சிறப்பைக் காண்போம். திருக்குறள் அ என்று தொடங்கி ன் என்று முடிகிறது. வரி வடிவின் முதல் எழுத்து அ இறுதி ன். முதலும் இறுதியும் புணர்

வது அன்பில். தமிழில் அகர முதல மொழிகள் நயமுடையன. அன்பு, அருள், அழகு, அறிவு, அறம், அன்னை, அப்பன். அன்பதிகாரத்தில் ஒருகுறளைப்படிப்போம்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு.

பார்ஸி:- அன்பின் வழியது அருமையான கருத்து. கருத்துரையும்...

ஆறு:- உயிர் வாழ்க்கை நிலைத்து நிலவுவது அன்பினால். அன்பு வழிச் சென்றால் உயிர் இன்ப நிலை பெறும். அன்பில்லாதவர் வாழ்க்கை எலும்பும் தோலும் போர்த்த வெற்றுடம்பாகும்; அதில் உயிர்த் துடிப்பான உள்ளன்பிராது இதைத்தான் எங்கள் நாயன்மார்கள் உணர்ந்து பாடுகிறார்கள். அன்பே சிவம்; அன்பே கடவுள்.

பார்ஸி;- எங்கள் ஏசுநாதர் அன்பு மயம்; பாவிகளான உலகோரிடம் வைத்த அன்பினால் சிலுவையேறித் தம்மைப் பலி கொடுத்தார்.

ஆறு:- எங்கள் வாகீசர் பரமபதியான சிவபெருமானிடம் வைத்தஅன்பினால் எத்தனையோ இடர்களைத் தாங்கினார். அவருக்கு நீற்றறை குளிர்ந்தது; மதயானை வணங்கியது; விடமும் அமுதானது. கல்லும் கடலில் மிதந்தது.

அப்பரைப் போன்றநல் அன்புப் பொறுமைக்குத்
தெப்பமாம் கல்லுந் திரை

**பார்வதி:-** அஃதெப்படி? கல் எப்படி மிதக்கும்? ஆர்க்கிமிடீஸ் கண்ட உண்மை விரோத மாயிருக்கிறதே.. ...

**ஆறு:-** கப்பல் எப்படி இருக்கிறது? கல்லில் சிவ னருள் புகுந்து மிதக்க வைத்தது. அந்த அற்புதத் தேவாரம் பாடுவோம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

**பார்வதி:-** கதை தெரியும். ஆனல் அதெப்படி? வியப்புத்தான்.

**ஆறு:-** சேக்கிழார் இதற்கு விடை கூறுகிறார்.

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் - சீவன் சிவனைச் சரண் புகுந்து அன்பு செய்தால் அருள் விளங்கும். அருளின் அற்புதமே அப்பர்.

**பார்வதி:-** நீரும் சிவனை அன்பு செய்கிறீரே; உமது கழுத்தில் கல்லைக் கட்டி மன்னார்க் குடா வில் போட்டால் மிதப்பீரா; நமச்சிவா யம் சொன்னல் நடுக்கடலில் மிதக்க லாமா? எங்கள் ஏசுநாதர் சிலுவைப்பட்

டும் பரிசுத்த ஆவியுடன் எழுந்து மேலே சென்றுரே . ...

**ஆறு:-** அதே மாதிரி உம்மைச் சிலுவையிட்டால் எழுவீரா? முடியாது. தெய்வத் திருவருளால் மகான்கள்காட்டிய அற்புதத்தை நாமும் காட்ட முடியாது. நீர் கல்வாரிக் காட்சியைக் காட்ட முடியுமா? புயலை அமைதியாக்க முடியுமா?

**பார்ஸி:-** நான் சேசுவாக முடியுமா? முடியாது.

**ஆறு:-** நானும் அப்பராக முடியாது. திருவருள் மகான்கள் அற்புதம் செய்தனர். திருமுறைப் பெரியார் செய்தவை அற்புதத் தேவாரங்களில் உள்ளன.

**பார்ஸி:-** உங்களுக்குத் தேவாரம் போல் எங்களுக்கும் சுவிசேசப் பாடல்கள் உள்ளன - கேளும்.

Unto thee my Lord, I lift my Soul
My God I have put my trust in thee.

**ஆறு:-** எங்கள் சமயத்திலும் இக் கருத்துக்கள் உண்டு . ...

பாரொடு விண்ணாய் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்!

**பார்ஸி:-** தெரியும் எங்கள் போப்பையா திருவாசகம் படித்துள்ளேன்.

**ஆறு:-** திருவாசகம் மாணிக்கவாசகர் அருளியது.

**பார்ஸி:-** அது சரி. நாங்கள் ஒரே கடவுளையே தோத்திரத்தால் வணங்குகிறோம். கிறிஸ்துவின் பெயரால் விளங்கும் நாங்கள் எத்தனை பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், திருமடங்கள் கட்டியுள்ளோம். உலகெலாம் சிலுவை நிலவுகிறதே.

**ஆறு:-** உண்மை, பர்ஸிவேல் ஐயா, உண்மை. அரசாங்கம் உங்கள் கையில் உள்ளது. பணமுள்ளது. பயிற்சி பெற்ற தொண்டர் படையுள்ளது. பல வசதிகள் உள்ளன. நாங்களும் விடுதலை பெறுவோம். தொண்டரைத் தூண்டுவோம். பணி செய்வோம். எங்கள் சிவத் தொண்டரும் உலகெல்லாம் கோவில்நாட்டித் திருமுறை முழக்கம்செய்யும் காலம் வரும். ஆனால் நாங்கள் மனிதர் பெயரால் சமயங் காண்பதில்லை. எங்கள் சமயம் அப்பர் சமயமோ, சம்பந்தர் சமயமோ அன்று. சீவபதியான சிவன் பெயரால் அமைந்த சிவசமயச் சிறப்பு எல்லையற்றது. சம்பிரதாய சமயங்கள் அறநெறிகளையே புகட்டும். சரியை ஒழுக்கம், கிரியை வணக்கம் இரண்டுடன் அமையும். சைவம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்களைக் கொண்டது. அகச்சமயம் புறச்சமயம் என்ற சோபான பட்சத்தால் உலகச் சமயங்களை யெல்லாம் உள்ளடக்கியது. அவரவர் மனப் பான்மையின் படி பெயர் வடிவங்கள் பல. ஆனாலும் ஒரே இறைவனையேஉயிரன்புடன் நாங்கள்பற்றுகிறோம். ''ஒருவனேபோற்றி ஒப்பில் அப்பனேபோற்றிவானோர் குருவனே போற்றி'' என்று முறையிடுகிறார் மணிவாசகர்.

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைந்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது.

என்றார் காரைக்காலம்மையார்.

**பார்வலி:-** அதெல்லாம் சரிதான். சிவத் தொண்டரைப் பயிற்றுவதில் எமக்குத் தடையில்லை. எங்கள் சமயம் உலகளாவியது. அதில் சேருவோரை நீர் தடை செய்வது தகாது. உலகில் சமயத்தைப் பரப்ப எங்களுக்கு உரிமையுண்டு.

**ஆறு:-** உங்கள் சமயத்தை உபதேசிக்க உங்களுக்கு உரிமையுண்டு. அவ்வாறே எங்கள் சமயத்தைக் காக்கவும் பரப்பவும் எங்களுக்கு உரிமையுண்டு. மா மரத்திற்குப் மாங்கனி பழுக்க உரிமையுண்டு. பலா மரத்திற்குப் பலாக்கனி பழுக்க உரிமையுண்டு. அவரவர் நெறியில் அவரவர் அமைவோம்.

**பார்வலி:-** அஃதிருக்கட்டும் புலவரே, தில்லைநாதரும் சின்னப்பரும் சுந்தரம்பிள்ளையும் ஞானஸ்நானம் பெறாது தடுத்தீரே! என்னிடம் சம்பளம் பெற்றுப் பிழைக்கும் உமக்கு இது நேர்மையா?

**ஆறு:-** பாதிரியே, எம்சமயவுண்மைகளைவிளக்கும் உரிமை எமக்குண்டு. அதைக் கேட்டவர் உண்மையறிந்து சைவராகும் உரிமையும் அவருக்குண்டு. இங்கே நான் வயிறு வளர்க்க வரவில்லை. பணத்தடிமையுமல்லேன். இதோ இப்போதே இந்த அடிமை

வேலையை விட்டு விடுகிறேன். இனி என் வாழ்வைப் பரசமயப் பாழில் இறைக்க மாட்டேன். பாதிரியாரே நாமும் உம்மைப் போலக் கலாசாலைகள் கண்டு, அச்சுக்கூடம் நாட்டி, நூல்களை யாத்து, தொண்டரைப் பயிற்றி எங்கள் சைவசமயத்தைப் பரப்ப எழுந்தோம்.

*நாம்யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்ப மில்லை*
*தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான*
*சங்கரநற் சங்கவெண் குழையோர் காதிற்*
*கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்*
*கொய்மலர்ச் சேவடி யிணையே குறுகினோமே.*

**(தலைப்பாகை வைத்துக் கொண்டு விரைதல்)**

**பார்ஸி:-** **(எழுந்து பின் சென்று)** குருவே குருவே வருக, வருக. உம்மைப் போன்ற புலவர் அரிது, அரிது. உண்மையை அறியவே கேட்டேன்......வருக குருவே.

**ஆறு:-** பார்ஸிவேல் துரையே என்னைக் கந்தவேல் அழைக்கிறது: சிலுவையைப் போல் வேலை எங்கும் நாட்டிப் பணி செய்ய என்னுள்ளம் துடிக்கிறது. இதுகாறும் அவத்திற் குழைத்தேன்; இனிச் சிவத்திற் குழைப்பேன்.. விடை! விடுதலை! *(செல்லல்)*

வருதல் **(நவீனம்...விசுவநாதர் இருவரும் ஒளித்திருந்து சாடையாகப் பேசுதல்)**

**பார்ஸி:-** அருமையான புலவர்.. சொல்லின் செல்வர்! பாஸ்டர் மாத்யூ

**நவீ:-** வணக்கம் சுவாமி! சேசு வாழ்க (**சிலுவை போடல்**)

**பார்ஸி:-** மாத்யூ, ஆறுமுகப்புலவர் நம்மை விட்டுச் சென்றுர்.

**நவீ:-** சந்தோஷம் சுவாமி! அவர் தரும் தொல்லேக்கு எல்லேயில்லே. இதோ பாரும் 'பாதிரியே' என்ற அறிக்கை சைவப்பிரகாசர் என்ற பெயரால் நம்மைத் தாக்கு தாக்கென்று தாக்குகிருர். இதற்குச் சரியான அடி தயாராகுகின்றது. சுப்பிரபோதம், அஞ்ஞானிகளே இந்த மாத்யூங் சும்மா விடமாட்டான்.

**பார்ஸி:-** மாத்யூ, புலவருடன் பல புலவர் இருக்கின்றனர்.

**நவீ:-** வண்ணுர்பண்ணே வைத்தீசன் கோவில் மண்டபத்தில் அவர் போடும் சைவசைவ சைவசைவசை குண்டுகளுக்கு எதிர்க் குண்டு போட ஆளேத் திரட்டியுள்ளேன். சிலுவை யடியேன் துரையின் அடியேன்.

**பார்ஸி:-** யார் யார்? நமது பக்கம் ..

**நவீ:-** இருக்கிருர் விசுவநாதபிள்ளே.. .. இருக்கிருர் கந்தமடப் பிரபு. இருக்கிருர் தியாகு-ஆறுமுகத்தின் அண்ணு. கந்தசாமிகோவிலில் இவர் கந்தபுராணத்தை அவிழ்ப்

பாா, நாளை சூர சமஹாரம.. புராணம பலமாயிருககும - புராணததிறகு மேல வாணம புஸ எனறு கிளமபும. தைதா திஙகிணதோம பலமாகநடககும இரணடு தாசிகள அதறகெனறே தஞசாவூரிலிருநது வநது கநதமடப பிரபுவுடன இருககிறாா கள இதெலலாம நமது சைவபபிரகாச ருககுப பிடிககாது, கூறுவாா, சீறுவாா பிறகு தீபபறறிக கொளளும

(விசுவநாதபிள்ளை வருதல)

விசு - குட ஈவினிங சோ

பாாவதி - மாலை வணககம ஐயா - வாருஙகள்.

நவீ - தநதையே இவரே நமது விசுவநாதபிளளை ஏசுநாதபிளளையாவாா - ஆறுமுகததை எட்டு முகததிலும எதிாபபவா. பெரிய படிபபாளி

பாாவதி - உளளே சென்று பேசுவோம வாருங்கள

(எலலாரும உளளே செலலல)

# 9. அந்தப் பேச்சு வேண்டாம்

(சிவகாமி அமமையாா நாவலருககுத திருமணம பேசுதல - தியாகு ஒரு புரோகிதருடன் ஜாதகம பாாததல)

**சிவ:-** இந்தத் தை மாதத்திற்காவது கலியாணம் முடிக்க வேண்டும். கிளிபோலப் பெண் அமைந்தது.

**தியாகு:-** அமைந்ததம்மா... இவன் சுழி இப்படியிருக்கிறதே சைவமாம் சமாஜமாம், பிரகாசமாம்—என்னென்னவோ பேசித் தேவாரம் பாடித்திரிகிறுன். சோதிடரே-ஜாதகம் என்ன சொல்லுகிறது.

**சோதி:-** சாதகம் சாதகமே—லக்னம் சூனியம். ஐந்தாம் வீட்டில் சூரியன் புதன் சுக்கிரன் செவ்வாய் நான்கும் சேர்ந்திருப்பது சிறப்பே. ஆறும் வீட்டில் ராகு, ஏழில் சந்திரன், ஒன்பதில் சனி, பத்தில் வியாழன், பன்னிரண்டில் கேது இந்த ஜாதகத்திற்குடையவன் சிங்கம் போலிருப்பான்...எதிரிகளைப் பொருதி ஒரு கை பார்ப்பான் .. இவன் சிவயோகி.

**தியாகு:-** அதெல்லாம் அவன் மாதிரியே தெரிகிறது. கல்யாணம் ஆகுமா எப்போது

**சோதி:-** ஆனுலும் ஆகும் தையில் தையல்.

**தியாகு:-** அம்மா முகூர்த்தம் வைத்து விடுவோம். அவனுக்குத் தெரிய வேண்டாம். பெண் வீட்டுக்காரர் ஏராளமாகச் செய்வார்கள். கல்யாணம் கட்டினுலே இவன் சைவப் பித்தம் தணியும்.

**(வருதல் ஆறுமுகம்)**

ஆறு - வேணடேன புகழ வேணடேன செலவம
வேணடேன மணணும, விணணும
வேணடேன பிறபபிறப்புச சிறம
வேணடாா தமை நாளும
தீணடேன, செனறு சோநதேன, மனனு
திருப பெருந துறை யிறைதான
பூணடேன புறம போகேன இனிப
புறம போக வொடடேன

சிவ - வா! தமபி ஆறுமுகம வீடு தெரிகிறதா?

ஆறு - வீடு தெரிகிறது உஙகள விருபபும தெரி
கிறது அம்மா சோதிடன எனன பாாக
கிறா

தியா - உன கிரகஙகளைப பாாககிறா

ஆறு - சோதிடரே — என சிவ புணணியததிறகு
இடா செயய வேணடாம என விர
தம உமககுத தெரியாதா?

தியா - தமபி - நாலு போ போலே நீயும வாழ
வேணடும உனககுப பெண பாாததுள
ளோம

ஆறு - அணணு! பெணணு? என வாழவு மணணு?

தியா - தமபி தடை செயயாதே, பெண கொள
ளைச செலவததுடன வருகிறது.

ஆறு - என சிவநேசத்தைக கொளளை கொளள
எம பாசததுடன வருகிறதா? அணணு
அநதப பேசசே என காதில விழககூ
டாது

(காதை மூடி சிவ சிவா என்றல்)

**சிவ :-** ஆறுமுகம் இதென்ன மூட வைராக்கியம்? எனக்கு வயதானது, உடம்பு தளர்ந்து போனது. என் வாழ்வில், எவ்வளவோ துயரப்பட்டு மனம் நொந்தது. போகு முன் உனக்கொரு கல்யாணம் பண்ணி உனக்கொரு பேரப் பிள்ளையைப் பார்த்து விட்டுப் போக வேண்டுமப்பா. என் பேச்சினை மதித்து நட. உயர்ந்த இடத்தில் நல்ல பெண் அமைந்தது. நீ இணங்கா விட்டால் என் மனம் உடைந்துபோகும். அப்பா ஆறுமுகம் நான் கண்ணை மூடிய பிறகு உனக்குப் பொங்கிப் போட ஒருத்தி வேண்டுமப்பா. தாய்க்குப் பிறகு தாரம் என்பார்கள். நீ படித்தவன். உனக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். என் கண் முன்னே உன் மரபு வளரவேண்டு மப்பா. அவ்வளவுதான் என் வேண்டு கோள்.

(அழுகிறள்)

**தியா :-** தம்பி உன்னல் நாங்கள் எவ்வளவு மனம் வருத்தப் படுகிறோம் பார் - பேசாமல் இணங்கு. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.

**ஆறு :-** இல்லறம் மல் அது. நல்லறம் மன்று. தில்லை மன்றில் நடராசப் பெருமானை ஆத்மநாதனுக அடைவதே ம ன் ற ல். அதுவே நல்லறம் மற்றது மல்லறம். உன் மனை வாழ்வை நானும் பார்த்துக்கொண் டிருக்கிறேன். நீ இரட்டை அடிமை.

அங்கே பொன்னுக்கு அடிமை, இங்கே பெண்ணுக்கு அடிமை; நாவிற்கு அடிமை; ஆசை, ஆணவங்களுக்கு அடிமை.

**தியா:-** எனக்குக் கெட்ட கோபம் வரும். நீ பழைய ஏட்டுக்கு அடிமை, புராணப் புரட்டுக்கு அடிமை; உன் பெரிய புராணத்தில் என்ன இருக்கிறது? கந்தபுராணமும் பெரிய புராணமும் கட்டுக்கதை. முருகன் ஒரு குறத்தியை வேட்டையாடிய காமக் கதை.

**ஆறு:-** ஹா . அப்படியா பேசினை - சிவத்தொண்டர் சரிதையை இகழ்ந்த உன் நாவை இதோ அறுக்கிறேன் பார். எறிபத்தநாயனுர் என்னுட் புகுந்து கொண்டார்..

**(கத்தியை எடுத்துப் பாய்கிறுர்)**

**சிவ:-** (ஊடே விழுந்து) வேண்டாமப்பா ஆறுமுகம் இந்தக் கோபம் வேண்டாம். விலகிப் போ..

**தியா:-** (பக்கென்று சிரித்து) ஹ ஹ ஹ! தம்பீ, தம்பீ! உன் புராணப் பைத்தியம் எவ்வளவு டிகிரி ஏறியது என்று பார்த்தேன். விளையாட்டாகச் சொன்னேன்.

**ஆறு:-** விளையாட்டா? என்ன குற்றம் செய்தீர்? நான் எதையும் பொறுப்பேன். சிவபராதம் பொறுக்கமாட்டேன். அற்ப மனிதரான நீர் அப்பார், சுந்தரர், சம்பந்தர், கண்ணப்பர், காரைக்கால் அம்மையார் கதைகளை யெல்லாம் சொல்லும் பெரிய

புராணத்தை இகழ்வதா? ஹ (**மீண்டும் பாய்தல்**) முருகப்பெருமானைஇகழ்வதா?ஹ

**சிவ:-** விட்டிடப்பா.. ஆறுமுகம் என் மனங் குளிரக் கலியாணம் செய்து கொள்.

**தியா:-** பெண்டாட்டி வந்தாலே இவன் கோபம் தணியும். வேதக்குட்டிக்குருக்கள் சொல்லவில்லையா?

**ஆறு:-** என் மனதைப் புண்ணுக்க வேண்டாம். வேதக்குட்டிக்குருக்கள் மனுநீதி புகட்டினுர். அவருக்குச் சொன்ன பதிலேயே மீண்டும் சொல்லுகிறேன். இந்த ஒரு பேச்சு மாத்திரம் என்னிடம் பேசவேண்டாம்.

**சிவ:-** ஆறுமுகம், தாயின் பாசத்தை உணர்வாயா? அண்ணன் பேச்சை மறுப்பாயா? வாழ்வை வாழாது வீணுவாயா - நாலு பேரைப் போலப் பெற்றுப் பெருகி உலகின்பத்தை நீயும் நுகர வேண்டாமா? கண்ணு கேளடா தாய் சொல்லை.

**ஆறு:-** சிவசிவசிவ! அம்மா எனக்கு வேறெண்ணமில்லை.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கண்ணுகக் காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்

புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

உலக வாழ்விற்கு இறந்தேன்; மாறிப் பிறந்தேன்; சிவகாமத்தில் என்னை மறந்தேன் - மற்றெல்லாம் துறந்தேன்.

**தியா:-** தம்பி இதெல்லாம் அந்தக் கால வேதாந்தம். சுந்தரர் பரவை - சங்கிலியாரை மணக்கவில்லையா? திருவள்ளுவர் வாசுகியை மணக்கவில்லையா? ஞானசம்பந்தர் பூங்கோதையை மணக்கவில்லையா? மனித வாழ்விற்கு மணவினை மறுமலர்ச்சி தரும். அசட்டுத் துறவை ஒழி. அழகான பெண்ணை மணந்து இல்லறம் நடத்து.

**ஆரூ:-** அண்ணா, என் மணப் பெண் சிவகாமங் கொண்டது. நானும் சிவத்தொண்டை மணம் புரிந்து கொண்டேன்.

முன்னம் அவனுடை நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னர் அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

**தியா:-** அட இழவே எதற்கெடுத்தாலும் தேவாரமா...தம்பி உனக்குப் பித்துப் பிடித்து விட்டது. இப்படியிருந்தால் துரையிடம் நீ வேலை பார்க்க முடியாது...வெள்ளைக்காரரிடம் பழக வேண்டிய முறையே வேறு...வேலை வேண்டுமானால் என்னைப்

போலிரு நெற்றியைக் கழுவு...இந்த சித்தாந்தப் பித்தத்திற்குக் கை கழுவு.

ஆறு:- வேலையா.. எனக்கினி இரண்டே வேலை.. தமிழ் - சைவம். பார்ஸிவல் துரைக்கு இனி நாம் காலை வந்தனமோ மாலைவந்தனமோ செய்யோம் பாதிரிமார் பக்கம் போகோம்.

தியா:- ஐயையோ கெட்டது குடி.... வேலையை விட்டு விட்டாயா — நவீனம் சொன்னது சரிதான்!

ஆறு:- அண்ணு 1848 செப்டம்பர் மாதம் முதல் எனக்கு விடுதலை. இதுகாறும் பாழுக்குழைத்தேன்; இனி பரனுக்குழைப்பேன்.

தியா:- நீ என்ன மதியீனம் செய்து கொண்டாய்; இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய்? ஊரில் உனக்கினி என்ன மதிப்பிருக்கும்?

ஆறு:- அண்ணு நான் உம்மிடம் ஒரு காசு கேட்க மாட்டேன்.

சிவ;- என்னப்பா ஆறுமுகம் இப்படி வேலையை விட்டாய்—எப்படிப் பிழைப்பாய்? சிவனே எத்தனை இடையூறு?

ஆறு:- அம்மா மாணிக்கவாசகரை நினை - மந்திரி வேலையை உதறித் தள்ளிச் சிவகைங்கரியத்தில் ஈடுபட்டார் வாதவூரர்; அதனுல் வந்த சிறையிடர்களைப் பொறுத்தார்;

திருவாசகம் அளித்தார்; அமரராஞர்; அவரை நினைக்கிறோம் - அதேபோல என்னுயிர் பொருள் ஆவியெல்லாம் சிவபாதத்தில் வைத்தேன். அவன் என்னை ஆட்கொண்டு நடத்துகிறான்.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமை யெல்லாம்
குன்றேயனையாய், என்னையாட் கொண்ட போதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எமமானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே.

**தியா:-** சரி, சரி, முத்திப் போனது சிவப்பித்தம்; போ உன் விதிப்படி (**கடிகாரம்பார்த்து- தொப்பி மாட்டி**) நான் அலுவலுக்குச் செல்கிறேன். (**போதல்**)

**சிவ:-** ஆறுமுகம் என் மனம் வேதனைப்படுகிறதே ஊரார் உன்னைப் பித்தன் என்று கேலி செய்கின்றனர். எதிரிகள் உன்மேல் பாய்கின்றனர். வெளியே தலைகாட்ட வெட்கமாயிருக்கிறதே -

**ஆறு:-** தாயே, இப்போது இகழ்பவர் பின்னே புகழ்வார். இப்போது பித்தன் என்போர் பிறகு சித்தன் என்பார். இப்போது தூற்றும் உலகம் ஒருநாள் என்னைப் போற்றும்— வாழ்வின் குறிக்கோள் அடிமை வேலையா? காமச் சேறு? பிறவித் துயரா? தேனுண் வண்டு மலத்தை நாடுமா?

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாய்ப் புகுந்தேன்

என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதி
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

தாயே பாருருவாய ·பிறப்பு அற வேண்டும். பத்திமை பெற வேண்டும். அடியாருடன் அருளைப்பாடி யாடவேண்டும். வேட்கையும் வெகுளியும் விட்டு விமலன் அன்பை வளர்க்க வேண்டும். அருள் மணம் கமழும் தமிழை வளர்க்க வேண்டும். ஐந்தெழுத்தோதி அதனை வணங்க வேண்டும். சிவமோங்கத் தவமோங்கத் தொண்டு பரவ வேண்டும். இதுவே என் பிறவிப் பயன். சம்பந்தரை வணங்கிச் செல்கிறேன்.

வேத நெறி தழைத் தோங்க
மிகு சைவத் துறை விளங்க
பூத பரம் பரை பொலியப்
புனித வாய் மலர்ந் தழுத
சீத வள வயற் புகலி
திரு ஞான சம் பந்தர்
பாத மலர் தலைக் கொண்டு
திருத் தொண்டு பரவு வாம்!

இனி பேச்சில்லை. செயல் — ஓம் சிவம் சிவம் சிவம்.

**சிவ:-** உண்மை, உண்மை. தமிழ் வளரவும் சைவம் தழைக்கவும் என் மகன் தொண்டு

செய்ய வேண்டும். ஆனால் எப்படியப்பா? நீ வீராவேசமாகப் பேசுகிறாய். ஆனால் எத்தனை பேர் உன்னை ஏசுகிறார்கள் தெரியுமா? உலகப் போக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது. அதோ பார்; கந்தசாமி கோவிலில் கொடிகட்டித் திருவிழா நடக்கிறது. அங்கே தே வா ர திருவாசகத்திற்கோ கந்தபுராணத்திற்கோ முதன்மையுண்டா? மக்கள் சதிருக்கும் வாணவேடிக்கைக்குமே கூடுகிறார்கள்.

**ஆறு:-** அம்மா .... நமது சமயத்தில் ஊழல்கள் மலிந்தன; புல்லுருவிகள் அதன் உயிரைக் குடித்தன. பரசமய ஆதிக்கத்தைத் தடுப்பதுடன் உட்சமயச் சீர்திருத்தமும் செய்ய வேண்டும். இதுகாறும் பரசமயங்களை எதிர்த்தேன். இப்போ நமது சமயங்களிலும் கோவில்களிலும் மலிந்த அபசாரங்களை நீக்கப் புகுவேன் - எதிர்ப்பு கடுமையாயிருக்கிறது. எனினும் **(திருநாள் முழக்கம் கேட்கிறது.)** செல்வேன் முருகா-

நாள் என்செயும் வினைதான் என்செயும்
எனைநாடி வந்த
கோளென் செயும கொடுங்கூற் றென்செயும்
குமரேசன் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து
தோன்றிடினே.

———

# ஆறுமுக நாவலர்

## இரண்டாம் பாகம்

## 10. கந்தசுவாமி கோவில்

**பாத்திரங்கள்:-** மாப்பாணர், தாசிகள், ஆறுமுகம், விசுவநாதபிள்ளை, நவீனம், பொது மக்கள்.

(கந்தசாமி கோவிலில் சந்நிதி மூலஸ்தானத்தில் வேல் நாட்டியிருக்கிறது. இருபுறமும் வள்ளி தெய்வானை. கந்தைய மாப்பாணர் சரிகை வேட்டியும், வெள்ளித் தடியும், வைர மோதிரமும், தங்கக் கட்டி ருத்திராட்சமும் அணிந்து சந்தன, குங்குமப் பொட்டுடன் கோலாகலமாக வீற்றிருக்கிருர். திருப்புகழ் நடக்கிறது.)

திருப்புகழ் கோஷ்டி:—

*முந்து தமிழ் மாலை கோடி, கோடி*
*சந்தமொடு நீடு பாடி, பாடி*
*முஞ்சர் மனைவாசல் தேடித்தேடி - உழலாதே*
*தந்திமிதி தோதி தீதித்தீதி*
*தந்தன தான தான தான*
*செஞ்ஜணகு சேகு தாளத்தோடு - நடமாடும்*
*செஞ்சிறிய கால் விசாலத் தோகை*
*துங்க அனுகூலப் பார்வைதீர*
*செம்பொன் மயில்மீதிலே யெப்போதும்-வருவாயே*

(வருதல் நாட்டிய மாதர் - நட்டுவர்-சின்னமேளத்துடன்)

மாப்:- வந்து விட்டார்கள் - கலைமாதர் ஹோ நிறுத்து திருப்புகழ், நிறுத்து - தேவாரம், நிறுத்து வழிபாடு; நடத்தட்டும் நாட்டியம்.

## நாட்டியக் கச்சேரி

இராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

காத ... ... ... வா ... ...னேன் ... சகியே - என்
கண்ணனைகண்ணனைக்கண்டுகண்டுகளித்தே (கா)
தாதகடதகதிம் தரிகிட தகதகதோம்
ததிங்கிண தளாங்கு தரிகிடதோம்
தகதக தகஜிமி தோம்
தத்தரிகிட தளாங்கு தரிகிட தோம்
தகதோம் தத்தோம் தகதகதோம்
தோம் தோம், தோம்

காதலாகினேன் சகியே. (மாப்பாணர் அருகே சென்று கடைக்கண் பாய்ச்சல். எல்லோரும் சபாசு சபாசு என்று கைதட்டல்)

(வருதல் - ஆறுமுகனார், செட்டியார் முதலியோர் தேவாரம் பாடி)

ஆறு:- வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்

மாப்:- ஹே ஹே - இதென்ன இடையூறு நிறுத்தையா ஆனினம் . போ போ

தாசி:- காதலாகினேன் சகியே

ஆறு:- வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக.

தாசி:- ஆதரவோடென்னை அணைத்து முத்த மிட்டே தக, தக தமி ததிங்கிணதோம்.

ஆறு:- ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகம் முந்துயர் தீர்கவே.

மாப்:- ஆறுமுகப்புலவரே இங்கே நடப்பது கலை விருந்து. அதை இடைமறித்துத் தேவா ரம் பாடுவது முறையல்ல. போம் ..... பகை வரும், சதுர் நடக்கட்டும்.

ஆறு:- நிறுத்தையா இந்தக் கொலை விருந்தை, கந்தமடப்பிரபுவே, வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேருழவர் பகை. இது ஆலயமா? ஆடரங்கமா? இது கந்தசாமித் திருநாளா - காமக்களி யாட்டமா? இங்கே நடப்பது சிவாகமமா? சிற்றின்பமா? யாழ்ப்பாணத் தமிழர்களே, சைவர்களே நமது சமயம் வாழவேண் டுமா? வீழவேண்டுமா?

மாப்:- ஹே போம் போம் நிறுத்தும் பேச்சை . சிவாகமத்தின்படிதான் இங்கே நடக்கி ரும். எங்களுக்கு எல்லாம் தெரியும்.

ஆறு:- எல்லாம் தெரிந்த பிரபுவே, மூலஸ்தா னத்தைப் பாரும் வேலுக்குப் பக்கத்தில் வள்ளி தெய்வானையை வைப்பதா?

மாப்:- ஹே நிறுத்து நீ வேலாயுத தூஷிகன்...

ஆறு:- இல்லை அன்பரே எமது கந்தபுராண இறு தியில் வேலும், மயிலும் துணை என்று அச்சிட்டிருப்பதை இதோ பாரும். சைவ

மக்களே கேளுங்கள். வேல், முருகன் படைக்கலம். அவன் ஏவலைச் செய்யும் அடிமை. அந்த அடிமை ஆறு முகனாகுமா? அடிமைக்குப் பக்கத்தில் வள்ளி தெய்வானையை வைத்து வணங்கலாமா? அவர் வேலின் மனைவியா? வேலை வணங்கும் கோவில் கந்தர் கோவிலாகுமா?

**மாப்:-** இதுவே தொன்று தொட்டு வந்த பழக்கம். இதற்கு நீர் என்ன செய்தீர்.

**ஆறு:-** நாம் இங்கே கந்தபுராணம் படித்தோம். மூலஸ்தானத்தில் முருகனை நாட்ட முயன்றோம். அதற்கு வேண்டிய சிலையும் சிற்பியும் கொணர்ந்தோம். ஆறாயிரம் வசூலானது. நீர் காரியத்தைக் கெடுத்தீர். பொறுத்தோம்.

**தாசி:-** தோம், தோம் ததிங்கிணத் தோம் தோம் தொந்தத் தோம், காத . லா.....னேன் சகியே.....

**மாப்:-** ஹே போம்...போம்......

**ஆறு:-** எதிர்ப்போம், மறுப்போம் . இதென்ன களியாட்டம்? இது சுவாமி சந்நிதியா சூதுத்தரங்கமா? பெருமக்களே இந்த அநியாயத்தைக் கண்டியுங்கள்.

**விசுவ:-** அட ஏனையா கத்துகிறாய்...கலையுணராக் கரடி போம்...அப்புறம்...நாட்டியம் நடக்கட்டும்.

தாசி;- கண்ணைக் காட்டிக் கையைக் காட்டி கனி முறுவல் பூத்த நாளே, பெண் மனத்தைக் கொள்ளை கொண்ட பிரியமான துரையிடமே, காதலானேன்சகியே. (மாப்பாணர் அருகே ஆடி) திதகிடதா ததிங்கிண தகா தகதா...

(மாப்பாணர் ஒரு மோதிரம் அளித்தல்)

ஆறு:- தகாது தகாது. நிறுத்து களியாட்டத்தை பொதுசனங்களே இது கந்தர் கோவில். சிவாகம - குமாரதாந்திர முறைப்படி இங்கே வழிபாடு நடத்த வேண்டும். ஒரு கோயிலுக்கு இலிங்கம் வேண்டும்.

நவீ:- ஹ ஹ ஹ ஹ இலிங்கம் அஞ்ஞானிகளே இலிங்கம் அழுகி விழுந்த மற்றப்படியான்.

ஆறு:- அட சீ நீயும் வந்தாயா தைதா பார்க்க உன் மூளையெல்லாம் மற்றப்படியான்... அதனுலேதான் இலிங்க தூஷணை செய்கிருய். உன் மண்டை இலிங்க வடிவு அது மற்றப்படியாஞ? உன் சுட்டை விரல் இலிங்க வடிவு - அது மற்றப்படியாஞ? இதோ, இந்தச் சுடர், இந்தமரம், அதோ ஆகாயம், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், பூகோளமெல்லாம் இலிங்க வடிவு. காய், கனி தானியங்கள் எல்லாம் இலிங்க வடிவு - அவை மற்றப்படியாஞ?

எல்:- நியாயம் - நியாயம். ஏ நவீனம் மூடு வாயை.

மாப்:- போதும் - இனி போம் - இங்கே இலிங்கப் பேச்சுத் தேவையில்லை.

ஆறு :- மாப்பாணரே, ஒரு கோவிலுக்கு மூன்று இலிங்கம் தேவை - ஒன்று தூல இலிங்கம்- கோவில் தூவி, இரண்டு பத்திர இலிங் கம் - பலிபீடம், மூன்று சூக்கும இலிங் கம் - மூலமூர்த்தி. மூலமூர்த்தி இல்லா தது கோவிலாகாது.

மாப் :- எல்லாம் எங்கள் குருக்களையா அறிவார். இங்குள்ள பார்ப்பார் அறிவார். நீர் வாயை மூடும்.

ஆறு :- நெஞ்சு பொறுக்குதில்லையே - சமயதீட்சை பெருத அசைவரை இங்கே பூசை செய்ய விடலாமா? உள்ளும் புறமும் சிவமே பார்ப்பார், பார்ப்பார். இந்த அசைவர் என்ன பார்ப்பார். தட்சணை பார்ப்பார்; பணத்தை மோப்பம் பார்ப்பார். எந்த வீட்டில் சரிகை, உருமால், புடவை அகப் படுமென்று பார்ப்பார். செல்வப் பரிகா ரியார் ஏவல்வழி செல்லப் பார்ப்பார். சிவபிரானுக்கு வழிபாடு செய்யவா பார்ப் பார்? யாழ்ப்பாணச் சைவர்களே இந்தக் கோவில் பிராமணோத்தமரான ஆரியச் சக்கரவர்த்தியின் மந்திரி புவனேஸ்வர பாபுவினாலே தாபிக்கப்பட்டது. அதன் விழாவும், வழிபாடும் சிவதக தீட்சை பெற்ற அந்தணரால் சிவாகமப்படி நடந் தன. அந்தக் கோயிலைப் போர்த்துக்கீசர் இடித்துத்தள்ளினர். இப்போதுள்ள கோ யில்உலாந்தாக்காரர்காலத்தில் சிருப்பு ரகு நாத மாப்பாணராலே கட்டப்பட்டது. இங்கே ஆகமவிதி அவமதிக்கப்படுகிறது. இங்கே மது மாமிசம் சாப்பிடுவோர் சந்

தனம் இளைப்பதும் பிரசாதங்களை வீடுகளுக்குக் கொண்டு வழங்குவதும் என்ன நீதி? அபிஷேகப் பாலும், பஞ்சாமிர்தமும் திருட்டுப் போகின்றன. பலிபீடத்தில் சோறு வைப்பதில்லை. பூ வைக்கின்றனர். காக்கை ஏமாறுகின்றது. சலமோசனம் செய்து கைகால் கழுவாதவர்கள் தீப ஆராதனை செய்வார்கள். கற்பூரத்தை டப் என்று அவித்து அதையே மறுநாள் ஏற்றுகின்றனர். இன்று அருச்சித்த நிர்மால்யத்தை மீண்டும் அருச்சிக்கின்றனர். சுவாமி எழுந்தருளும் தேர்ச்சக்கரத்தில் ஆட்டிரத்தம் வடிக்கின்றனர். அந்தோ! உயிர்ப்பலி தருவது சைவமா? புலால் உண்பது சைவமா? மது உண்பது சைவமா? யாழ்ப்பாணச் சைவர்களே கெட்டி, கெட்டி உமது போக்கு!

**எல்:-** ஏ.. எங்களைத் தூற்றுதே - போ.. போ...

**மாப்:-** பலி கொடுப்பது பழைய வழக்கம்.

**ஆறு:-** படு மூடப் பழக்கம். பெரியவரே நீராவிக் கப்பல்கள் ஆடு மாடு பலிகொடுத்தா செல்கின்றன. ஆடு, மாடு பலி கொடுத்தா புகைவண்டிஓடுகிறது? ஆரூர்த் தேர் பலி கொடுத்தா நகருகிறது? பலி கொடாமல் இந்தச் சிறு தேர் ஓடாதோ?

**மாப்:-** பொதுமக்களே இந்த வம்பனை வெளியேற்றுங்கள். நமது இன்பம் கெடுகிறது.

**(இப்போது வாண வேடிக்கை தொடங்குகிறது)**

**ஆறு:-** வாண வேடிக்கை வேறு; பொதுமக்களே இங்கே வரும் இன்பம் இன்பமா? ஆண், பெண் பாராது இடித்து மோதிக் கும்ப லில் தள்ளுவது, பெண்டிரை இழிமொழி பேசி மார்பில் கை போட்டுத் தள்ளுவது, தாசிகளைக் கூத்தாடக் காண்பதா இன் பம்? இது பொதுமக்கள் கோவில், இதற்கு ஏராளமான வகூல் வருமானம் உண்டு. பணமெல்லாம் வீணுகிறது. காசு கரியா கிறது... வாணம் பறக்கிறது. மானம் பறக் கிறது. **(மல்லகச் சட்டி வர்ணம் பறக்கி றது)** பிற சமையிகள் நகையாடுகிருர்கள். பத்திரிகை தூற்றுகிறது. பரத்தையர் நடனத்தை நிறுத்துங்கள். மாப்பாணரே மீசை நரைத்ததே இன்னுமா சபலம்?

**விசுவநாதபிள்ளை, மாப்பாணர்:-** உன் பேச்சை நிறுத்து - போ போ போ. நீங்கள் ஆடுங்கம்மா.

**தாசி:-** கொள்ளை கொண்ட பிரியமான துரை - தளாங்கு தரிகிட தகதிமிதோம் ததிங்கிண தோம், காதலானேன் சகியே,

**ஆறுமுகம் கோஷ்டி:- (திருப்புகழ் பாடிக்கொண்டே செல்லல்)** ஏறுமயில் ஏறி விளையாடு முக மொன்றே.

**(வாணங்கள் பறக்கின்றன-புஸ் வாணம் ஆறுமுகத் திடம் வந்து விழுகிறது.**

**மாப்:-** இருக்கட்டும் ஒரு கை பார்ப்போம்.

விசுவ:- இவரது சைவத்தை இறக்குவோமா?

தியா:- காலம் மாறியது, கத்துவான் இவன் - வித்துவானும் நடக்கட்டும் வாணவேடிக்கை. ஆடல், பாடல், அழகு, வாணம்- இவையிருந்தாலே ஜனங்கள் கூடுவார்கள். நடக்கட்டும் வாணவேடிக்கை-புஸ்! புஸ் புஸ்

மாப்:- ஆறுமுகம் துணிந்த நாவலன். மறுபடி வந்து வாயைத் திறந்தால்...எனக்குப் பயமாகவேயிருக்கிறது.

விசுவ:- இதோ இருக்கிறேன் . ஆங்கிலச் சிங்கம் - சரியான கேள்வி கேட்டு ஆளை மடக்குவேன். ஆடல், பாடல், அழகுக் கலை விருந்துகள் குஷியாக நடக்கட்டும்-இதோ வரட்டுப் பிரமசாரி வண்ணார்ப் பண்ணையில் சைவப்பண்ணை நடத்தட்டும்.

(வருதல் நவீனம்)

நவீ:- ஹலோ மிஸ்டர் விஷ்வநாதன் ..சைவப் பிரகாசரின் சண்டமாருதம் கரைபுரண்டு வெள்ளமாக ஓடுகிறது. வா வா தடுப்போம்..... ஹலோ ஃபிலாஸ் (எல்லோரும் ஓடுதல்)

## 11. சைவ சமயிகளே

பாத்திரங்கள்:. நாவலர், சதாசிவம்பிள்ளை, நவீனம், விசுவநாதபிள்ளை, பொதுமக்கள்.

(வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் சுவாமி சந்நிதி பளிச்செனத் தெரிகிறது. சாரங்கி யுடன் தேவாரப்பாடல் நடக்கிறது. ஆறுமுகப்புலவர், பொன்னம்பலப்பிள்ளை, பொன்னம்பலம் இராமநாதன், சதாசிவப்பிள்ளை, நடராசையர், தில்லை நாயகம் முதலியோர் சந்நிதியில் நிற்றல். தேவார இசைக்கேற்ப தில்லைநாயகம் ஆடுகிறார்.)

எல்லோரும் :-

*பணணும் பதம் ஏழும்பல ஓசைத்தமிழ் அவையும்*
*உண்ணின்றதோர் சுவையும் உறுதாளத்தொலி பலவும்*
*மண்ணும் புனல்உயிரும் வருகாற்றும் சுடர்மூன்றும்*
*விண்ணும் முழுதானான் இடம் வீழிம் மிழலையே.*

(குருக்கள் அர்ச்சனை செய்தல்)

நாவ:- *வம்மின் அடியீர் நாண்மலர் இட்டுத் தொழுதுய்ய*
*உம்அன்பினொடும் அன்பு செய்தீசன் உறைகோயில்*
*மும்மென்றிசை முதல் வண்டுகள் கெண்டித் திசைமெ*
*விம்மும்பொழில்சூழ் தண்வயல்வீழிம்மிழலையே. (ங்கும்*

(தீபாராதனை, வாத்திய முழக்கம், அடியார் தீப நடனம்)

எல்லோ:- *தக்கை தண்ணுமை தாளம் வீணை*
*தகுணிச் சங்கிணைச் சல்லரி*
*கொக்கரை குட முழவினோ டிசை*
*கூடிப் பாடி நின்றாடுவீர்*
*பக்கமே குயில் பாடும் சோலைப் பைஞ்*
*ஞீலியே மென்று நிற்றிரால்*
*அக்கும் ஆமையும் பூண்டிரோ சொலும்*
*ஆரணிய விடங்கரே.*

**நாவலர்:- கூட்டுப் பிரார்த்தனை செய்வோம்.**

பொன்னார் மேனியனே புலித்
 தோலை அரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்
 மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ
 பாடியுள் மாணிக் கமே
அன்னே யுன்னை யல்லால் - இனி
 யாரை நினைக் கேனே.

நமப் பார்வதி பதயே!

**எல்:-** அரஹரா மகாதேவா!

**நாவ:-** சிற்சபேசா!

**எல்:-** சிவ சிதம்பரம்

**நாவ:-** தென்னாடுடைய சிவனே போற்றி!

**எல்;-** எந் நாட்டவர்க்கு மிறைவா போற்றி

**சதா:-** சிவநேசச் செல்வர்களே தமிழும் சைவமும் அமரத்தன்மை பெற்றவை! எத்தனையோ புறச் சமயங்கள் இங்கே வந்து மோதின. இடுக்கண் செய்தன. ஆனால் சிவபெருமான் திருவருளால் எழுந்த திருத் தொண்டர் சமய விளக்கத்தைத் தூண்டி சுடராக்கித் தமிழ் நெய் விட்டு வளர்த்தனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் செய்த அற்புதங்களையும், அவர்கள் பாடிய நான்மறைப் பாசுரங்களையும் இன்று நாம் செவி மடுத்து இன்புறுகிறோம். சேக்கி

மூலர் அருளிய பெரிய புராணத்தைப் பிரியமாகக் கேட்கிறோம். திருக்குறள் வழியே நடக்கிறோம். பெரியார் வாக்குகள் காலத்தின் ஓலத்திற் கரைந்து மறைந்த இந் நாளிலே ஆறுமுக நாயனர் உதித்தார்—ஐந்தாங் குரவர் என்று அவரைப் பணிவோம் அவர் சைவப்பிரகாசராக விளங்குகிருர். சமயத் தொண்டிற்கே நைஷ்டிய பிரமசரியவிரதம் பூண்டு, தமது விலை பெற்ற உத்தியோகத்தையும் வீடு வாசலையும்விட்டு எத்தனையோ எதிர்ப்புகளைத் தாங்கி - நமக்குப் பணி பரவுகிருர். அவர் நமக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிருர். இன்று சைவத்தை வளர்க்கும் ஒரே சைவப் பாதிரி ஆறுமுகனரே -அவரது சைவப் பாடசாலை இன்று நாட்டிற் சிவமணம் பரப்புகின்றது. அவரது சைவப் பிரகாச வித்தியாசாலையே தமிழுக்கும், சைவத்திற்கும் திருத்தொண்டரைப் பயிற்றும்அருட்பண்ணையாக விளங்குகிறது. வித்தியானு பாலன யந்திரசாலைதான் இன்று பழந்தமிழ் நூல்களைப் புதுக்கித் தருகிறது. செந்தமிழ் வியாசரான ஆறுமுகநாயனர் ஏராளமான பதிநூல்களையும் கருவிநூல்களையும் நமக்குத் தந்தார். **(நூல்களை ஒவ்வொன்ருக எடுத்துக் காட்டி)** சூளாமணி நிகண்டு, நன்னூல், தொல்காப்பியம், இலக்கணக்கொத்து, கந்தபுராணம், கோயிற்புராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், சிவஞானபோதம், திருக்குறள் எல்லாம் பாருங்கள் -

வாங்கிப் படியுங்கள். இதோ பாலபாடம்— சைவவினு விடை ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல்கள். இனிய எளிய உரை நடையில்அவர்சமய உண்மைகளை விளக்கி நம் அறிவையும், தூய வாழ்வையும் ஊக்கிஞர். அவரையும் எதிர்த்து இடர்செய்யும் போலிகள் பலர் — எந்தக் காலத்திலும் இந்த எதிர்ப்புகள் உண்டு. ஆனுல் அஞ்சா நெஞ்சம் படைத்த சைவச் சிங்கம் சற்றும் தளர்வின்றிக் கடமை காக்கிருர். ஐந்தாங்குரவர் ஆறுமுகஞர் வாழ்க! அவரது சொல்லமுதை இப்போது பருகுவோம். நமப் பார்வதீ பதயே!

(மாலை சூட்டுதல்)

எல்:- அரஹர மஹாதேவா — ஐந்தாங்குரவர் ஆறுமுகநாயஞர் வாழ்க!

ஆறுமுகநாயஞர் சொற்பொழிவு

(மறைவாயிருந்து நவீனம், விசுவநாதபிள்ளை குறிப்பு எழுதல்)

*சீர் பூத்த கருவி நூல் உணர்ச்சி தேங்கச்*
*சிவம் பூத்த நிகமாக மங்கள் ஓங்கப்*
*பார் பூத்த புறச்சமய இருள்கள் நீங்கப்*
*பரம் பூத்த சைவ நிலை பாரோர் தாங்கப்*
*பேர் பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்*
*பிறை பூத்த சடை மௌலிப் பிராஞர் தந்த*
*வார் பூத்த அறிவிச்சை தொழி லென் ருேதும்*
*மதம் பூத்த விநாயகன்ருள் வணங்கி வாழ்வாம்.*

திருச்சிற்றம்பலம்:-

சைவ சமயிகளே! உங்களிடம் உள்ள அன்பின் மிகுதியினுலே சொல்கிறேன் கேளுங்கள்; நமக்கு ஏராளமான சமய சாத்திரங்கள் உண்டு; கோயில்கள் உண்டு; கந்தபுராணம் உண்டு. பெரிய புராணம் உண்டு; திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் போன்ற அரும் பெரும் அருள் வாக்குகள் உண்டு; நீங்கள் சிதம்பரம்செல்வீர், காணிக்கை போடுவீர், சிவசிவா என்பீர், ஆனுல் நமது சமய உண்மையும், உணர்ச்சியும், வளர்ச்சியும், கிளர்ச்சியும் உங்கள் கருத்திற் பற்றவில்லையே. உங்கள் பிள்ளைகள் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களும் சிவபுண்ணிய நூல்களும் கற்று நிற்க வழி செய்யவில்லை. சமய நிலையமான கோவில்களில் சதிரும், வாணமும், காமச் சித்திரங்களும், சோற்றுச் சண்டையும், வேசையர் பாடலும், வீணர் வம்பும் நடக்கின்றன. இதெல்லாம் பார்த்து அன்னியர் நம்மைக் கேலி செய்கிருர்கள். சிவதூஷணம் செய்யும் பள்ளிக்கூடத்தில் உங்கள் பிள்ளைகளைச் சேர்க்கிறீர்கள் - நாம் சைவப்பாடசாலை வைத்துள்ளோம். அதற்கு ஆதரவு இல்லை.

யாழ்ப்பாணச் சைவர்களே பாதிரிமார் நெடுந்தொலையிலிருந்து வந்து நமது தமிழைக் கற்று, தமிழில் தங்கள் சமய போதனை செய்து நம்மவரை மதம் மாற்றுகிருர்கள். கல்விப் பணியாலும் மருத்துவப் பணியாலும் மக்களை வசப்படுத்துகிருர்கள். சைவர்களே நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நமது வேதாகம சித்தாந்த சாத்திரங்களில் ஒரு வரியாவது அறிவீரா? உணர்வீரா? சைவக் குருமார் என்ன தொண்டு செய்கிருர்கள்? நீங்கள் வருந்திச் சம்பாதித்ததை அவர்கள் பாதத்

தில் கொட்டுகிறீர்கள். அவர்கள் எளிதில் வாங்கி உண்டு உடுத்தி மாப்பிள்ளைக் காளைகள் போலத் திரிகிறார்கள். அவர்கள் திருமுறைகளை ஓதி, திருத் தொண்டு பரவி, சமய வளர்ச்சிக்கு வாழச் செய் யுங்கள். அன்று அப்பரும், சுந்தரரும் அடியார் குழுவுடன் செய்த சமயப்பணி இன்று நடக்கவேண் டும். நமது கோவில்கள் கூத்து மேடையாகாது அருள் மின்சார நிலையங்களாக விளங்க வேண் டும். நாம் அச்சகம் நாட்டி பழந் தமிழ் நூல்க ளையும், சமய சாஸ்திரங்களையும் வெளியிடுகிறோம். அவற்றைக் கற்று நில்லுங்கள். உங்கள் மக்களுக் குச் சைவ ஒழுக்கங்களைப் பழக்குங்கள். சைவசம யமே சமயம்.

**(விசுவநாதபிள்ளை வெகு மிடுக்குடன் எழுந்து)**

**விசு:-** இதை மறுக்கிறோம் — மற்றச் சமயங்கள் சமயமில்லையா? கோடான கோடி பேர் கிறிஸ்தவர், இஸ்லாமியர், பௌத்தர் இருக்கின்றனர். அவர்களிடையே நன்றா கப் பயிற்சி பெற்ற மதப்போதகர் உண்டு; அவர்கள் எத்தனையோ பொது நலன்க ளைச் செய்கிறார்கள். சைவர் எத்தனை பேர் என்ன நன்மை செய்கிறார்கள்? இப் படிக் கோயில் திண்ணையில் பேசிச் செல் வதைத் தவிர என்ன காரியம் நடக்கி றது! ஞாயிறு சர்ச்சு மணியடித்தால் கிறிஸ்தவர்கள் சுத்தமாக, ஒழுங்காக வந்து பிரார்த்தனை நடத்துகிறார்கள். பாதிரிமார் பள்ளிக்கூடம் வைத்து மருத் துவசாலை வைத்து முறையாகப் பணி செய்கிறார்கள். ஏழைஅனாதைகளை எடுத்து வளர்த்து ஆளாக்குகிறார்கள் — சைவருக்

குப் பரிந்து பேசும் சாம்பல் சுவர்கள் என்ன செய்கிறார்கள்...?

**ஆறு:-** சைவனாகப் பிறந்த நீ என்ன செய்கிறாய்? கிறீஸ்தவன் தன் சமயத்தை அனுட்டிக்கிறானே. நீ உன் மதத்தை அறிந்ததும் உண்டா? மற்ற மதங்கள் குருமார் பெயரால் வழங்கும் சம்பிரதாயங்கள். நமது திருநெறிச் சமயம். சிவபெருமான் பெயரால் வழங்கும். சீவன் சிவமாக வழி நடத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்களைப் பயின்றும் பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரத்தம், சந்யாசம் ஆகிய நான்கு ஆசிரமங்களையும் விளக்கும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருடார்த்தங்களை நல்கும். அதை அறியக் கூடத் திறனில்லாத நீர் - வீண் கேள்விகள் கேட்டுக் காலத்தைக் கொலை செய்கிறீர் - உம்மைப் போன்ற கோடரிக் காம்புகளாலே தான் சைவம் பரவாது தடைப்படுகிறது.

**நவி:-** அஞ்ஞானிகளின் சமயத்தை ஆதரிக்கலாமா? எங்கும் நிறைந்த இறைவனைக் கட்டையிலும் கல்லிலும் தொழலாமா?

**ஆறு:-** பஞ்சாட்சரம் பிள்ளையே நீர் இப்படி உமது பிறவிச் சமயத்தை விட்டு வயிற்றுப் பிழைப்பிற்காகப் பிற சமயத்தைக் கட்டியழலாமா? எமது சைவ தூஷண பரிகாரத்தைப் படித்த பின்பும் சிவநெறியை இகழலாமா? சைவ வினா விடை, பாலபாடம் - இவற்றையாவது படியுமே-

உம்மைப் பலமுறை குப்புறத் தள்ளியும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறீரே. பால் கொக்குப் போலிருக்கும் என்றால் கொக்கு என் வாயில் நுழையாது என் கிறீரே - கெட்டி கெட்டி கெட்டி! பதி பசு பாச விளக்கம் அறிவீரா? திருவாச கத்தை, திருமந்திரத்தை, திருக்குற ளைப் படித்ததுண்டா? நீர் அறிந்தது கிராப்புத் தலை. சட்டை தொப்பிதான்... (கைதட்டல்)

**நவீ:-** (சுருட்டு விட்டு) கிறீஸ்தவர் ஆட்சியில் இருந்து கொண்டே கிறிஸ்து மத கண் டனம்செய்வதுஉமக்கேஆபத்து நீர்பேசுவ தெல்லாம் அஞ்ஞானம் - துரோகம்.

**ஆறு:-** இத்தனை பேரிடையே சுருட்டுப் புகைப் பது ஞானமோ? அப்பரும், சம்பந்தரும், மாணிக்கவாசகரும், தாயுமானுரும் போற் றிய சைவ சமயத்திற் பிறந்தும் அதைத் துறந்து தாயைப் பழிப்பது ஞானமோ? கூலிக்குக் கூச்சல் போடும் பஞ்சாட்சர மாத்தியூவே, நாம் கூலிக்குப் பேசவில்லை. எமது சமய உண்மைகளைப் பேச எமக்கு உரிமை உண்டு. அதைத் தடுக்க உமக்கு உரிமையில்லை; அரசாங்கத்திற்கு உரிமை யில்லை. சிவபெருமான் சேவையில் இறந் தாலும் இன்பமே. யாருக்கும் அஞ்சோம். அப்பரைக் காத்த அரனடி பிடித்தோம். அப்பர் கைலையேறிய மனவுறுதியுடன் முன்செல்கிறோம். சிவனே துணை.

**நவீ:-** உமது சிவனுக்குப் பெண்டாட்டி பிள்ளை உண்டே...அப்படியிருந்தும் தாருகாவன லீலை நடந்ததேன்?

**விசு:-** உமது முருகன், வள்ளி வேட்டையாடியதேன்? சுப்பிரதீபம் படித்தீரா? தெய்வம் ஒன்று? பலவா?

**ஆறு:-** சுப்பிர போதம் படித்தீரா? தத்துவம் அறியாப் பித்தரே ஒன்றே குலம்; ஒருவனே கடவுள் என்பதே எங்கள் சமயம். நீங்கள் ஏகோவா என்ற பெயரால் கடவுளை வணங்குவது போலல்லவா நாங்கள் பேரின்பச் சிவமாக, பரமபதியாகக் கடவுளை வணங்குகிறோம் சிவம் ஒன்றே- அதன் ஆற்றலையே சக்தி என்கிறோம். படைக்கும் ஆற்றல் பிரம்மா; காக்கும் ஆற்றல் விஷ்ணு; அழிக்கும் ஆற்றல் உருத்திரன்; மறைக்கும் ஆற்றல் மகேசன்; அருளும் ஆற்றல் சதாசிவம் என்கிறோம். ஒரே ஆற்று நீரை அங்கே ஓடுவது கங்கை இங்கே ஓடுவது காவேரி என்பது போல் அறிக.

**விசுவ:-** உமது சமயத்தில் பொய்க் கதைகள் மிகுதியே. பாண்டியன் வெப்பு நோயைச் சாம்பலைப் பூசித்துத் தீர்த்தாரா சம்பந்தர்? அப்படி இயலுமா?

**ஆறு:-** ஏன் இயலாது? ஏசுநாதர் ஆடை நுனி பட்டதும் பெரும் பாடு விட்டது. அவர் நிழல் பட்டதும் நோய் தீர்ந்தது - என்கிறீரே .. எந்த மதங்களிலும் அற்புதங்

கள் உண்டு. எங்கள் சமயாசாரியருந் திருவருளால் அற்புதம் செய்தனர்.

எல்:- (கைதட்டி) சிவம் வாழ்க! சிவம் வாழ்க!

(நவீனமும் விசுவநாதபிள்ளையும் கோபமாகச் செல்லல்)

ஆறு:- பொதுமக்களே, ஞாயிறு தோறும் அவர்கள் கூடி வணக்கம் செலுத்துவதுபோல வெள்ளி தோறும் இங்கே கூடுகிறோம். இப்போது பிரார்த்தனை செய்து செல்வோம். நாளை இங்கு திருநாவுக்கரசு நாயனார் வரலாறு நடக்கும்.

எல்:- *தலையானை எவ்வுயிருந் தான் ஆனானை*
*தன் உருவம் யார்க்கும் அறிய வொண்ணா*
*நிலையானை நேசர்க்கு நேசன் தன்னை*
*நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற*
*மலையானை வரியரவு நாணாக் கோத்து*
*வல்லசுரர் புரமூன்றும் மடிய எய்த*
*சிலையானைத் திருநாகேச் சுரத்துளானை*
*சேராதார் நன்னெறிக்குச் சேரார் தாமே*

*திருச் சிற்றம் பலம்.*

(தீபாராதனை நடக்கிறது. எல்லோரும் ஹர ஹர ஹர ஹர மஹாதேவா சிவ பார்வதி ரமணா சதாசிவா என்ற நாமாவளி பாடுதல்)

(திரை விழுகிறது)

திரைக்கு முன் நவீனமும் விசுவநாதமும் பேசிக் கொள்கின்றனர்.

# 12. எதிர்ப்பு

**பாத்திரங்கள்:** நவீனமும், விசுவநாதபிள்ளையும்.

(நாவலருக்கு எதிர்ப்புகள் பலவாயின. அவர் யாழ்ப்பாணத்தை விட்டுச் சிதம்பரம் சென்று ஆக்க வேலை தொடங்குகிறார்)

(விசுவநாதனும் நவீனமும்)

**விசு:-** *மிஸ்டர் நவீனம் நல்ல செய்தி ஹ ஹ ஹ...ஹ*

**நவீ:-** *என்ன மான் - நல்ல செய்தி — ஆறுமுகம் உள்ளமட்டும் நல்ல செய்தி ஏது!*

**விசு:-** *ஆறுமுகம் சிதம்பரம் சென்று தேவாரம் பாடுகிறார். நமக்குத் தலைவலி விட்டது.*

**நவீ:-** *விட்டதா! அவரை நினைத்தாலே அடி வயிறு குமுறுக்குகிறது. அவர் அங்கே ஆள் சேர்த்து மறுபடி வருவார்! அங்கு சும் மாவா இருப்பார்? பாடசாலை நாட்டு வார். அச்சுக்கூடம் வைப்பார்.*

**விசு:-** *என்ன இருந்தாலும் பாதிரிமார் போல வருமா? எத்தனை கல்லூரிகள், மருத்துவ சாலைகள், கோயில்கள், மடங்கள், சுவி சேஷக் கூட்டங்கள், அணியணியாக உப தேசியார்கள் கொண்ட ஒரு சமயத்தை இவர் எதிர்த்து என்ன செய்ய முடியும்? பணமேது; பொதுஜன ஆதரவேது...... ஊராரே இவரை எதிர்க்கின்றனர்.*

**நவீ :-** அஞ்ஞானிகள் எல்லாம் அவன் பேச்சில் மயங்குகிருர்கள். செய்தி தெரியுமா? சென்னைப் புலவர்களெல்லாம் இவருக்கு ஆதரவு; திருவாவடுதுறை ஆதீனம் இவருக்குப் பட்டம் தருமாம்... இராமநாதபுரம் அரசர் இவருக்கு மரியாதை செய்வாராம் - பெரிய பெரிய மனிதர்களெல்லாம் இவர் முன் கைகட்டி நிற்கிருர்களாமே.

**விசு :-** அங்கேஎன்னநடந்தாலும்சரி. இங்கேஇவர் கொடி பறக்காது. நீ அங்கே பாதிரிமாருக்குக் கடிதம் எழுது

**நவீ :-** இதோ முதல் வேலை அதுதான்

சிலுவை யேந்திமுன் செல்வோம்
ஜெகத்தை யெல்லாம் வெல்வோம்
சேசு வாழ்க சேசு நேசர் வாழ்கவே!

**விசு:-** வாழ்கவே வாழ்கவே சேசுநேசர் வாழ்கவே!

**(செல்லல்)**

# 13. நாவலர் துயரம்

**பாத்திரங்கள் :-** ஆறுமுகம், அம்பலவாணர், தேசிகர், மீனுட்சி.

**(நாவலர் நடராஜப் பெருமான் முன்னிலையில் தன் இடர்களை நீக்க வேண்டுதல்)**

ஆறு:- அரசே பொன்னம் பலத் தாடும்
அமுதே என்றுன் அருள் நோக்கி
இரை தேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற் றேன்
கரை சேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன் பால்
பிரை சேர் பாலில் நெய்போலப்
பேசா திருந் தால் ஏசாரோ!

பரமபதியே! நின் அருட்பணியே என்வாழ்வு! நின் அருள் விளங்கவும், சைவம் வளரவும், தமிழ் தழைக்கவும் ஓயாது பாடுபடும் எனக்கு உனது கருணை பொழிய வேண்டும். சைவப் பிரகாச வித்தியாசாலை, அச்சகம்; நூல் வெளியீடுகள் எல்லாம் எப்படியோ நடக்கின்றன. சதாசிவம்பிள்ளை முதலியோர் என்னுடன் கல்விப் பணி செய்கின்றனர். பிடியரிசி தண்டித் தொண்டு செய்ய முயன்றேன்- பணம் போதவில்லை; தருமம் கொடுப்பாரில்லை - கொடுப்பதைக் கலைக்கும் கொடியர் பலர். எந்தையே, சிவபெருமானே எனக்குப் பெரிய நினைவுகளைத் தந்தாய் - அவற்றை நிறைவேற்ற வழி செய்யாதிருப்பது நன்றோ பகைவர் தொல்லை பொறுக்க முடியவில்லையே. இப்படி யிருந்தால் உயிர் விடுவேன். தமிழும் சைவமும் என் உயிர்த் துடிப்பு ..கடவுளே சைவ ஒளி பரப்ப வரந்தருவாய்...பகைவர் தொல்லையை ஒழிப்பாய்......

மணிகொண்ட கடல்புடை கொள் இந்நாட்டில் உன்சமய
நிர்த்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளங்குவான் கருதி - இம்
மை பொருட் பேறெழிந்தே
களிகொண்ட வித்தியா சாலைதாபித் திவ்வூர்க்
கயவர் செய்யும் இடர்கள் கண்டும்

கல்லூரி யதை நடாத்தப் பொருட்டுணை செயக்
  கருது வோர் இன்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப் பினைஃ தனையிகழும்
  அந்நிய மதத்தர் சாலை
யாமென நினைந்த னெஞ்சு அற்பகல் துயருறல்
  அறிந்து மொரு சிறிதும் அருளாத்
திணிகொண்ட நெஞ்சஇனி நின்முன் யான் உயிர்விடுதல்
  திண்ணம்நீ அறியா ததோ!
சிறியேனதன் பிலர்ச் சனைகொள் அழகியதிருச்
  சிற்றம் பலத் தெந்தையே.

(நடராஜாவின் குஞ்சித பாதத்தில் ரோஜா மலரை வைத்து வணங்குதல்)

முத்தனே முதல்வா முக்கணு முனிவா
  மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பக்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
  பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
  செழுமலர்க் குருந்த மேவியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
  அதெந்துவே ஏற்றரு ளாயே!

(வருதல் சதாசிவம்பிள்ளை - வந்து கடிதம் தருதல்)

சதா:- ஓம் சிவம்.

ஆறு:- (உடைத்துப் பார்த்தல்) அப்பனே - உன் னருளை வியந்தேன் வழி காட்டினுய்... சதாசிவம் இக் கடிதத்தைப் படி. புல வர் மீனுட்சி சுந்தரம்பிள்ளை எழுதியிருக் கிருர்.

சதா:- (படித்தல்)

செந்தமிழ் உலகும் திருநெறிச் சைவமும்
சந்ததம் வாழச் சலியா துழைக்கும்
சிவத்திரு நாவல செவ்வேள் முருகன்
தவத்திருப் பெயரைத் தாங்கிய புலவோய்
நின்னறி வாற்றலும் நிகரிலாத் தொண்டும்
பன்னரு நூலும் பழந்தமிழ் இனிமையும்
புகழ் மணம் பரவப் புலனுறக் கண்டு
மகிழ்ந் துனை இங்கே வரவேற் கின்றோம்.
ஆவடு துறையின் அருட் சந்நிதானம்
நாவலநின் சொன்ன யத்தினை உவந்து
சிறப்புச் செய்யச் சித்தங் கனிந்ததால்
மறுப் பில்லாது மகிழ்வுடன் வருக.
நூல்களைக் கொணர்க நுவலரும் அன்புநின்
பால் வகித் தழைக்கும் பழந்தமிழன்பன்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை

சிவனருள்பூத்தது......இனி எல்லாம் நல மாகும்.

ஆறு:- வழிகாட்டினான் சிவ பெருமான். சிவ பெருமானை வழுத்திப் புறப்படுவோம்....

சுருட்டி ஆதி

பல்லவி

நிருமல பரசிவ — சண்முகா - சுத்த
நித்திய சத்திய — வித்தகனுங்குகா

அனுபல்லவி

திருவுலாவு மிலங்கையின் மேவிய
சீர்திகழுங் கதிர் காமத்துறைகின்ற

சிற்பரா — அருந் — தற்பரா - அன்பர்
சிந்தையுகந்த மருந்தனி வேலனே (நிரு)

சரணம்

அறிவுக்கறிவாய் நின்றவா - கிரௌஞ்சகிரியுடன்
அவுணர் கிளையைக் கொன்றவா
குறிகுண மிறந்திலகு முருகா
கூரந்து ழாயணி மருகன் மருகா
கோலனே - புரி - நூலனே - ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே இன்பருள் (நிரு)

# 14. நாவலர் இவரே

**பாத்திரங்கள்:- நாவலர், அம்பலவாணர், தேசிகர், மீனாட்சி, பொதுமக்கள்.**

**(திருவாவடுதுறை ஆதீனம் — நடராஜப் பெருமான் சந்நிதி:- அம்பலவாண தேசிகரும், சின்னப் பட்டம் சுப்பிரமணிய தேசிகர்முன்னணியில் தாண்டவராய சுவாமிகள், மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆறுமுக நாவலர் தெய்வசிகாமணிப் புலவர் முதலியோர் வீற்றிருக்கின்றனர் நடராஜ வணக்கம் நடக்கிறது)**

**எல்லோரும்:- (மலர் தூவல்)**

*கற்றுங் கெரி யோம்பிக் கலியை வாராமே*
*செற்றார் வாழ்தில்லை சிற்றம்பலமேய*
*முற்றா வெண் திங்கள் முதல்வன் பாதமே*
*பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. . . .*

**(தீபதூபம் காட்டுதல்)**

*சந்தமா ரகிலொடு சாதி தேக்கமரம்*
*உந்துமா முகலியின் கரையினில் உமையோடும்*
*மந்தமார் பொழில் வளர் மல்குவண் காளத்தி*
*எந்தையார் இணையடி என் மனத் துற்றவே.*

**(வணங்குதல்)**

*காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி*
*ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது*
*வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே.*

**(சந்நிதானம் எல்லோருக்கும் விபூதிப் பிரசாதம் தருதல். சிவம் சிவம் என்று எல்லோரும் வாங்கிக் கொள்கின்றனர்.**

**அம்பல:-** ஓம் சிவம், சிவநேசச் செல்வர்காள் இன்று நாம் ஆறுமுகப் புலவரைச் சிறப்பிக்கக் கூடியிருக்கிறோம். நேற்று அவரது செந்தமிழைப் பருகினோம். பதி, பசு, பாசம் விளக்கத்துடன் தற்காலம் சைவத்தை வளர்க்கும்முறைகளைப்பற்றி, உருக்கமாகப் பேசினார். அவரது புலமையும், சொற்பொழிவும் உள்ளுணர்வும், சிவநேசமும், பரந்த அனுபவமும், அஞ்சா நெஞ்சமும், ஆற்றலும் நம்மைக் கவர்ந்தன. அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மாணிக்கவாசகரும், திருவுடை அந்தணரும் போற்றி வளர்த்த சைவப் பயிரை இன்று செழிப்பூட்டி வளர்க்கும் ஆறுமுகனாரை இனி ஆறுமுக நாவலர் என்று அழைப்போம். நமது சின்னப்பட்டம் தேசிகர் திருமடத்து மரியாதைகளைச் செய்து பட்டம் சூட்டுவார்.

தேசி:- குருமஹா சந்நிதி தானத்திற்கு வணக்கம்; புலவர் சபைக்கு வணக்கம். சைவ உலகின் மணிவிளக்கு நமது ஆறுமுகநாவலர். அவர் தமிழுக்கும், சைவநெறிக்கும் செய்துள்ள தொண்டு மிகப்பெரிது. அதை மீனுட்சிசுந் தரப் புலவர் விளக்குவார்கள். அதற்கு நாவலர் இந்தசெம்பட்டைஅணிந்துவருக-

(நாவலர் வணக்கமுடன் வாங்கிச் செல்லல்)

மீனு:- குரு முன்னர் வணக்கம், ஓம் சிவம் ஆறு முகனுர் நமக்கு அரியநண்பர், உறவுக்கினி யார், உரைக்கினியார், உள்ளத்திற்கினி யார், மும்மொழிப் புலவர், வேதாகம வித்தகர், ஆங்கிலஅறிஞர், அவர் பைபிளைத் தமிழாக்கினுர், பாதிரிமாருக்குத் தமிழ் பயிற்றினுர், அப்பொழுது அவர்கள் செய்து வரும் ஆக்கவேலைகள் அவரைக்கவர்ந்தன. தாமும் தமது சமயத்திற்காக அத்தகைய பணி நலம் புரிய எழுந்தார். ஆறுமுகனுர் முற்றிலும் சுயநலமற்ற திருத்தொண்டர், அவர் உடன் பிறந்த சுற்றம் எல்லாம் துறந்தார். நைட்டிகப் பிரமச்சாரிய விரதம் பூண்டு வாழ்வைச் சிவார்ப்பணம் ஆக்கி னுர். தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரையில், சைவ வினுவிடை முதல் பெரிய புராணம் வரையில், சங்க நூல்கள் முதல் சமய நூல்கள் வரையில், எத்தனையோ அரிய நூல்களை வெளியிட்டார். அதற்கு வித்தியாநுபாலன யந்திரசாலை நாட்டினுர் இந்நூல்களைப் பயிற்ற நன்மாணுக்கரைக் கூட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை நாட்டினுர். சைவ மதத் தொண்டரை

பயிற்றினர். இரவுதோறும் பதி நூல்களைக் கொண்டு சிவநெறி விளக்கம் செய்தார். சிதம்பரத்தில் அவர் பெரிய பாடசாலை கண்டு கல்விப்பணி புரிகிறார். இவரது தூய வாழ்வும், திருத்தொண்டும் தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்தாற் பொலியும். அத்தகைய சொற் கொண்டலுக்கு, திருத்தொண்டருக்கு, சிவமயப் புலவருக்கு குரு மஹா சந்நிதானம் நாவலர் என்றபட்டம் அளித்தது மிகப் பொருத்தமாகும்; நமப் பார்வதி பதயே

(வருதல் நாவலர் பட்டணத்து சிவக் கோலத் துடன்)

எல்:- அர ஹரா மஹாதேவா......

தேசி:- ஆறுமுக நாவலரே வாரும். தத்துவராய சுவாமிகளே பரிவட்டம் கட்டும், பொன்னுடை போர்த்தும், தேவாரம் முழங்குக.

ஆறுமுக முதலியோர்:-

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன்; இனிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்து சீர்க்கரை
யூரிற் பாண்டிக் கொடுமுடி

எல்லோரும்:- நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாயவே.

ஆறுமுகநாவலர் வாழ்க.

**அம்பல:-** ஆறுமுக நாவலரே! நீர் சைவ சமயக் காவலராயிரும்.

**எல்:-** **செந்தமிழ் நாவலர் சைவக் காவலர் வாழ்க!**

**நாவலர்-- (குருமகா சந்நிதானத்திற்கு வணங்கி)**

*ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய்*
*உடன் தோன்றினராய்*
*மூன்ருயுலகம் படைத்து கந்தான்*
*மனத்துள் இருக்க*
*ஏன்ருன் இமயவர்க் கன்பன்*
*திருப்பாதிரிப் புலியூர்*
*தோன்ருத் துணையாயிருந்தனன்*
*தன்னடி யோங்களுக்கே!*

குருமகா சன்னிதானத்திற்கு வணக்கம்; சின்னப் பட்டம் தேசிகருக்கு வணக்கம்; நமது நண்பர் மீனுட்சி சுந்தரனுருக்கும் தாண்டவராய சுவாமி களுக்கும் வணக்கம்

*பத்தராய் பணிவார்சள் எல்லார்க்கும் அடியேன்*
*பரமனேயே பாடுவார் அடியார்க்கும் அடியேன்*

எளியேன்மீது அன்புகூர்ந்து பட்டமும் பரி வட்டமும் அளித்த திருவாவடுதுறை ஆதீனமுதல் வருக்கு நன்றி, வணக்கம். அடியேனைக் குறித்து அன்பின் மிகுதியால் நமது புலவரும் தேசிகரும் புகழுரைத்தனர். அடியேன் என்னறிவேன்? எல் லாம் சிவமயம்; எல்லாம் சிவனருள்! அவனரு ளாலே அவன் தாள் வணங்குகிறேன். அயரா அன்பின் அரன்கழல் செலுமே! அன்னியம் இன்

மையின் அரன் கழல் செலுமே! என்ற சிவ ஞான போதத்தின் அடிச்சுவடுகளைப் பற்றி அன்பு செய்கிறேன். சைவத்தின் பெருமையும் தமிழின் இனிமையும் சிவத்தமிழர் உரிமையும் அறிய அறிய என் உள்ளம் நீராய் உருகுகிறது. நம்மவர் பர சமயம் புகுந்து, பர நாகரிக மோகத்தில் உழலும் பரிதாபத்தைக் காணக்காண மனம் வருந்துகிறது. கடவுளைக் கொண்டு அமைந்த நம் இந்து சமயம் குறுகி வருகிறது. ஆளைச் சுற்றி ஆர்ப்பாட்டம் செய்யும் சமயங்கள் வலுப்பெறுகின்றன. நம்மவரே நமது சமயவுணர்வில்லாமல் வயிறு வளர்த்தால் போதுமெனத் திரிகிறார்கள். பள்ளிக்கூடங்கள் பரசமயிகளிடம்; நாட்டாட்சி பரசமயிகளிடம்; அவர்களுக்கு தொண்டர்படையுண்டு; கதிரவன் எழுந்ததும் கணக்கற்ற தொண்டர் அம்மதங்களைக் கவர்ச்சியாகப் பிரசாரம் செய்து மக்களை மத மாற்றுகிறார்கள்.; அவர்களுக்குப் பணம் உண்டு, படை உண்டு, செல்வாக்குண்டு; நமக்குச்சிவனருளேயுண்டு. நம்மவரோ வயிற்றடிமைகளாகி, வாயற்ற ஊமராகி, விளக்கினும் கேளாச் செவிடராகிப் பான்மை கெட்டலைகின்றனர். நமது அரிய நூல்களெல்லாம் ஏட்டுப் பிரதிகளாக உறங்குகின்றன. சமுதாயநிலை சொல்லித் தெரிய வேண்டுவதில்லை; பரமபதியான ஆண்டவன் எனக்கு ஓர் எழுச்சியளித்தான். அவன் அருளால் எளியேன் தமிழும் சைவமும் வாழும் பணிநலம் புரிந்தேன்: இன்னும் செய்யவேண்டியது மலைமலையாகஉள்ளது. சிதம்பரத்தில் ஒரு பல்கலைக் கழகம் நாட்டிக் காலத்திற்கேற்ப கல்வியுடன் சமயப் பயிற்சியும் அளித்து சிவத்தொண்டர்களைப் பயிற்றி அவர்கள் பாதிரிமார் போல நாடெங்கும் பணிபரவத் தூண்டவேண்டும். கோவில்களெல்லாம் சமயத் தொண்டரின் பயிற்சி மன்றமாக வேண்டும். ஐந்தாண்டுத்

திட்டம் வகுத்து நமது சமய நூல்களைப் புகட்டி, பிறசமயங்களும் உணரும்படி திறமையுடன் பிரசாரஞ் செய்யும் தொண்டரை நாடெங்கும் அனுப்ப வேண்டும். இதன் பால் மஹா சந்நிதானங்களும், தமிழ்நாட்டு வள்ளல்களும் மன்னர்களும் கருத்தூன்றினல் ஐந்தாண்டுகளில் நமது சமயம் எங்கும் பரவும்.

நமது திருமட நூல் நிலையங்களில் உள்ள அரிய நூல்களைச் செப்பனிட்டு உலகிற்கு அளிக்கவேண்டும். இன்னும் எத்தனையோ பணிகள் உண்டு. சிவனருளால் நிறைவேற வேண்டும். எல்லாம் சிவன் செயல்.

இன்றெனக்கருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்
தொன்றும் திருப்பெருந்துறை யுறைசிவனே
ஒன்றுநீ யல்லை; அன்றி யொன்றில்லை
யாருனை அறியகிற் பாரே.

**(பரவசத்துடன் கண்ணீர் வடித்துத் தெண்டனிடல்)**

**அம்:-** நாவலரே, உமது கருத்து நிறைவேறும். சிவனருள் பாலிக்கும் நமது நூலகத்தை ஆராய்ந்து வேண்டிய நூல்களை எடுத்து வெளியிடும் அருளாதாரம் உள்ளது. பொருளாதாரம் வரும்.

**(ஒரு கடிதம் வருகிறது-தேசிகர் பிரித்துப் படிக்கிறார்)**

தேசி:- நல்ல செய்தி. இராமநாதபுரம் முத்து ராமலிங்க சேதுபதியின் அமைச்சர் பொன்னுசாமித்தேவர் எழுதுகிறார்; நமது திருநெறிச் சைவம் வாழ ஆறுமுகநாவலர் செய்து வரும் அரும் பணிகளை நாம் போற்றுகிறோம்; அவர் நூல்கள் மிகத் திருத்தமாக உள்ளன. மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் பல ஏடுகள் உள்ளன. நமது நண்பர் பாண்டித்துரைத் தேவர் வேண்டிய உதவி செய்வார். உடனடியாகத் திருக்கோவையார், திருக்குறள் பரிமேலழகர் உரை, சேதுபுராணம் முதலிய நூல்களை வெளியிட்டால் அதற்கு வேண்டிய பொருளுதவியைச் செய்யலாம். நாமும், சேது மன்னரும் சிதம்பரத்தில் அன்றைக் காண்போம் - திருவாதிரை நாளன்று நடராச தரிசனத்திற்கு வருவோம். அப்போது பண்டாரசந்நிதிகளும் வருகை தந்தால் மிகப் பொருத்தமாகும்.

நாவ:- ஆ பரமபதியே நின் கருணையை என்னென்பது.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே.
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பார்ஆர் கண்ணுதலாய்க்காட்டாக்காலே.

எல்:- நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!

# 15. நாவலர் திருத்தொண்டு

(நாவலர் அச்சகம் - தொண்டர் அச்சுக் கோக்கின்றனர். யந்திரம் அடிக்கின்றது. நாவலர் ஒரு மூலையில் எழுதுகிறார். புரூப்பார்க்கிறார் - திருத்துகிறார்.)

**பாத்திரங்கள்:-** நாவலர், சதாசிவம்பிள்ளை.

*சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்.*

**சதா:-** *இந்தத் திருக்குறள் பாரம் அடித்துவிடலாம். திருக்கோவையார் அச்சுத்தான் தருக.*

**சதா:-** *இதோ......*

**நாவ:-** *சரி...... நீர் அச்சுக் கோப்பைக் கவனியும்.*

*காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்*
*சீரணி சிந்தாமணி யணிதில்லைச் சிவனடிக்குத்*
*தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சங்கநிதிவிதிசேர்*
*ஊருணி யுற்றவர்க்குஊரன்மாற்றியாவர்க்கும்ஊதியமே*

*சரி...நூல் முற்றுப் பெற்றது. சதாசிவம் சாற்றுக் கவிகள் கோத்தாயினவா?*

**சதா:-** இதோ மீனாட்சி சுந்தரனார் கவிதையைக் கோத்து புரூப் எடுத்தோம். அவர் அருமையாகத் தங்களைப் போற்றியுள்ளார்.

**நாவ:-** ஏதோ அன்பினால் புகழ்ந்தார் — எல்லாப் புகழும் இறைவனுக்கே.

சதா:- தங்கள் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமும்
இலக்கியமும் வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பல தெரிந்தோன்
சிவாகம நூற்பரவை மூழ்கி
உன்னுமனு பூதி யெனும் விலைவரம்பி
லாமணிகை யுறக்கொண் டுள்ளான்
இன்னுநய குணத்தினனுய்ச் சைவமெனும்
பயிர்வளர்க்கும் எழிலி போல்வான்.

நாவ:- சரி நூலை முடித்துத் தேவருக்கு அனுப்பும். அச்சுத் தம்பிகளா திருக்குறள் நடக்கட்டும். நாம் வித்தியாசாலை செல்கிறோம். ஓம் - சிவம்.

# 16. நாவலர் பாடசாலை

பாத்திரங்கள்:- அம்பலவாண தேசிகர், பொன்னுசாமித் தேவர், நாவலர், மாணவர்.

(அம்பலவாணதேசிகர், சுப்பிரமணியதேசிகர், பொன்னுசாமித்தேவர், நாவலர் எல்லாரும் மாணவரைப் பரீட்சை செய்தல்)

மாணவர் தேவாரம் பாடுங்கள்.

எல்:- வீடலால வாயிலாய் விழுமியர்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே

குற்றநீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்பம என்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

அம் :- நாவலரே மாணவருக்கு நல்ல பயிற்சி யளித்திருக்கிறீர். இதோ இப் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும். இதோ உமக்குச் சால்வை போர்த்துகிறோம் .. (நாவலருக்குச் சால்வை போர்த்தும் போது தேவார முழக்கம்)

மாண :- தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மா னிவனன்றே.

பொன் :- மகாசந்நிதானத்திற்கு வணக்கம். நமது நாவலர் சிவனருளால் சிவகைங்கரியத்திற்கே பிறந்தார். சற்றுமுன்னே நான் மாணவருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் நாவலரைப் பற்றி அரிய நிகழ்ச்சிகளைச் சொன்னார்கள். மாணவரிடம் அவர் உயிர் வைத்திருக்கிறார். அவர்களை சைவப் பாதிரிகளாக்கி நாடெங்கும் சமயப்பிரசாரத்திற்கு அனுப்பத்திட்டமிட்டுள்ளார். அதற்காக இங்கே ஒரு பெரிய வித்தியாசாலை நாட்ட முனைந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் சைவப்பிள்ளைகள் திரு

நீறிட்டுப் பாதிரிமார் கல்லூரிக்குச் செல்ல முடிவதில்லே, நாவலர் பொன்னம்பலம் இராமநாதனைக் கொண்டு பெரிய கல்லூரி அமைத்தார். அது மிக நன்ருக நடக்கிறது. நாவலர் அச்சகம் நாட்டினூர். அவரைக் கண்டதுமே டைன் துரை உத்தரவு தந்துவிட்டான். எத்தனேயோ மறுப்புகள் வந்தும் கேட்கவில்லே. நாவலர் நேர்மையான மனிதர் என்பதை எதிரிகளும் ஒப்புவர். இங்கே சிதம்பரத்தில் ஆறுமுகம்பிள்ளே சிவகாமிக்குரிய நிலத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். நாவலர் வழக்காடி அதைக் கோவிலுக்கே காணியாக்கினூர். இன்று அப்பரின் வீறுடன் சைவத்திற்கும் சைவநெறிக்கும்போராடும் ஒரே ஒருவர் நாவலர். அவர் எமது வேண்டுகோளுக்கிரங்கி கோவையும் குறளும் வெளியிட்டுதவினூர். சேதுபதி மன்னர் மிக்க மகிழ்ந்து இந்தப் பொன்னுடையுடன் பொற்கிழியும் அளித்து சைவக்காவலரான நாவலருக்குச் சிறப்புச் செய்கிமூர்.

(பொன்னுடை போர்த்தல். தேவார முழக்கம்)

மாணவர்:- நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே

விறகில்தீயினன் பாலிற்படு நெய்போல்
மறையநின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டுணர்வுக் கயிற்றினுல்
முறுகவாங்கிக் கடைய முன்னிற்குமே.

நாவ:- குருமார்களே, பெரியோர்களே, உங்கள் பரிசுக்கு நன்றி. இதோ இவற்றையெல்லாம் விலையாக்கி வித்தியாசாலைக்கே தருவோம். இந்த உடலுக்குச் சால்வை போர்த்தென்ன? பொன்னுடை புனைந்தென்ன? உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம். நமது சமயம் வாடுகிறது! நம் இளைஞர் பரதேசக் கல்வியால் பண்பாடிழந்து வயிற்றடிமைகளாகிப் பதமிழந்து வருந்துகிறார்கள். நாடெங்கும் ஆயிரம் ஆயிரமாகப் பரசமயம் புகுந்து நமது சமயத் தொகை குறைகிறது. நமக்குத் தொண்டரில்லை, தொகையில்லை, துணியில்லை, பணமில்லை; வழிகாட்டினாலும் நடக்க மனமில்லை. நமக்கு உடனேவேண்டியது சமய அறிவு, சமயத்தொண்டர், சமய நூல்கள், சமயக் கல்லூரி, இவற்றை நாட்டவே இந்த வித்தியாலயம் எழுந்தது. இதற்கு நாம் நூறு ரூபாகேட்டால் ஒரு ரூபா தான் வருகிறது. ஆயிரம் மாணவர் கற்று ஆளாகவும் ஆசிரியர்கள் கவலையற்றுக் கற்பிக்கவும் மானியம் வேண்டும். கல்லூரி மடாலயம், உணவு விடுதி, மாணவர் இல்லம், பிரார்த்தனைக் கூடம் இத்தனையும் அமைக்க வசதி வேண்டும். சரியான வசதியளித்தால் இன்னும் ஐந்தாண்டுகளில் சமய சாத்திர விற்பன்னரான திருத்தொண்டரைப் பயிற்றி நாடெங்கும் சிவமணம் கமழச் செய்வோம்.

பொன்:- நாவலர் பெருமானே, தங்கள் ஆன்மா தூயது; தங்கள் கருத்து திருவருட் கருத்து

வாருஙகள இராமநாதபுரம—எலலாம சிந
திபபோம (அமபலவாணா எழுதல
அடியாா—எழுதல)

தேவாரம - பூவினுக கருஙகலம பொஙகு தாமரை
ஆவினுக கருஙகலம அரன அஞசாடுதல
கோவினுக கருஙகலம கோடடம இலலது
நாவினுக கருஙகலம நமசசிவாயவே.

# 17. சாமி, சோம்பு

பாததிரஙகள - சோமபு, சாமி, நாவலா, போலிஸ

(சாமிநாதன நாவலருககுத தவசிபபிளளை நாவலருககு நோ எதிரி, பிடிவாதததடியன, திருடன, தாசிலோலன—சோமபு (சோமு) ஊதாரி, மடையன சாமி தூஙகுகிறுன )

சோமபு - டே சாமி டே தடியா மடயா (கொா கொா)

சாமி - ஹா நாவினுக கருஙகலம நலல சாம பாா சடணி வயிறறினுக கருஙகலம வடை பாயாசம லடடு (கண சொககுகிறது)

சோமபு - எனனடா சாமி உன தேவாரமா . . ஏணடா உன எசமான அவவளவு பாடு படடு புததகம போடடுப பளளிககூடம வைதது, பிரசஙகம பணணி சைவம சைவமனு உயிரை விடுகிருா.

**சாமி:-** சும்மாவா சோம்பு. அவருக்கு எத்தனை பட்டு, சால்வை, மாலை, கடுக்கன், மோதிரம் - ஜிலுஜிலுன்னு - நான் மூன்று வேளை அடுப்பங்கரையிலேயே வேகிறேன். எனக்கொரு தோடு போட நாதியில்லை. வாடா போடா தடியா என்றுதான் சன் மானம் கிடைக்கிறது.

**சோம்பு:-** நீதான் நல்ல சன்மானமா அடிச்சிட் டையே படிப்பாளன்னு...நகைக் கடை யிலே வச்ச பணம் எனக்கு.........

**சாமி:-** அ...எனக்கு இன்னும் கடன் இருக்குதடா ஐந்து மோதிரம் அவ பறிச்சிக்கிட்டா

**சோம்பு:-** அதற்குப் பரிசு கன்னத்தில் கிடைத்ததா?

**சாமி:-** அவளா...இன்னும் கொண்டா என்கிருள்.

**சோம்பு:-** டேலே என் பங்கு தரலே...ஐயாவிடம் சொல்லிடுவேன்.

**சாமி:-** ஐயா தங்கம்...நான் என்ன செய்தாலும் பொறுப்பார். பூசை, தேவாரம், பிரசங் கம், புத்தகம் இதுதான் அவருக்குத் தெரி யும். நமக்கு இதெல்லாம் மூளையில் நுழைவதில்லை. சாப்பாடு, தூக்கம், தூக் கம், சாப்பாடு இப்படிப் போகுது நமது காலம். (**கொட்டாவி விடுகிருன்**) இர வெல்லாம் அந்த மூதேவி வீட்டில் கண் விழித்து...தூக்கம் சுழற்றுதடா...

**சோம்பு:-** ஏண்டா உனக்குப் பயமில்லை......ஐயா சும்மா விடுவாரா?

**சாமி:-** அட போடா ஐயாவையுங் கண்டாங்க ஆத்தாவையுங் கண்டாங்க! நான் இராம நாதபுரம் துரையின் சமயற்காரரிடம் எல்லாம் சொல்லிவிட்டேன்.

**சோம்பு:-** என்னடா சொன்ஞய்? நாவலர் புத்தகப் பூச்சின்ஞ

**சாமி:-** புத்தகம் போட்டு விற்றுப் பிழைக்கும் வியாபாரி. சிவம், மலம், தீட்சை என்று ஏதோ பேசிப் பொழுதைப் போக்குகிருர். இவர் போன இடமெல்லாம் கலகந்தான்.

**சோம்பு:-** என்ன இப்படிப் போடுகிருய் சாமி, பெரிய, பெரியவங்கள் எல்லாம் அவருக்குப் பொன்ஞடை போத்துராங்க, புகழ்ராங்க, அவர் கையாலே திருநீறு வாங்கி வாயிலே போட்டுக்குருங்க. அவர் நன்மைக்கே பொறந்தவங்க என்கிருங்க கோபமே வராதுன்னு சொன்ஞங்க.

**சாமி:-** அவங்களுக்கு என்ஞத் தெரியும். என்ஊைப் போல இரவும் பகலும் கிட்டே இருந்து பழகினல் ஆளை அறியலாம். அவர் சிரிச்சு நான் பார்த்ததில்லே, குஷி இல்லே சள்புள் என்பார். யாழ்ப்பாணத்திலே மாப்பாணருடன் மோதிக்கிட்டார். கோவிலிலே தேவடியாள் ஆடிஞல் இவருக்கென்ன? இங்கே சிதம்பரத்திலேயும் தீட்சிதருடன் மோதிக் கொண்டிருக்கிருர். சிவதீட்சைக்காரரே நடராஜரைப் பூஜிக்க வேண்டுமாம்.

சாத்திரம பேசுகிறா இனறெரு சுவா மியுடன மோதல, வழககு, வமபு அஙகே யாழபபாணததிலே துவைனா துரையுடன மோதல உதயதாரகையிலே இவரைப பிசசுவாரிவிடடான. இவா தேவாரததோடே நிறக மாடடாா ஊருககு நலலது செயயக கருதி அதிகா ரிகள மேல அமபு போடக கிளமபுறா பொனனமபலம இராமநாதா சடட சபைககு வர பிரிடடோவுடன மோதல. இராமநாதபுரததிலே யாரோ புததகம போடடுப பிழைபபவா எனறராம - அஙகே மோதப பாயநது கொணடிருக கிறா எஙகும மோதல இஙகே தேவா ரம ஓதுதல ...இபபடிததான இவா பிழைபபு

**சோம்பு** - அட போடா - சோமபேறிப பயலே நீ அவனோடே மோதி இஙகே தூககத தோடு மோதிறய-ஐயாவுககு எபபோது சமையல செயவாய?

**சாமி** - அடே அவா பூசைபோடடுத தேவாரம பாடி வருவதறகுள நான மூனறுதரம சமைததுச சாபபிடடிடுவேன அவா பிழைபபு அபபடி

**(வருதல நாவலா - போலீஸகாரனை மறைந திருககச செயதல)**

**நாவ** - உன் பிழைபபு எபபடியபபா? எலலாம பகடி செயதாயோ. உன காதல எபபடி? உன கடமை எனன? மணி பதது இன னும சமையல ஆகவிலலை...

**சாமி:-** *(அண்ணுந்து) நமச்சிவாய நமச்சிவாய. விறகு ஈரம். கத்தரிக்காயை எலி கடித்தது காய்கறி சாமான் வாங்க வேண்டும்.*

**நாவ:-** *இந்த ஆள் யார்?*

**சாமி:-** *கூட்டாளி! காலே இட்டலி வாங்கித் தந்தான்.*

**நாவ:-** *நீ இப்படி சாப்பிட்டு அரட்டையடிப்பது. நாம் சிவபூசை செய்து பட்டினியிருப்பதா..... இரவு குரட்டை பகல்-அரட்டை இதுதான் வாழ்வா! இரவு எங்கே படுத்தாய்?*

**சாமி:-** *தூக்கம் வரும் இடத்தில் படுத்தேன்.. இங்கே கொசுக்கடி - சோம்பு வீட்டிலே படுத்தேன்.*

**நாவ:-** *பொய், பொய். நாக்கைச் சுடு. இரவில் இங்கிருந்து நமது பெட்டியைத் திறந்து*

**சாமி:-** *ஐயோ நானில்லே சாமி. உங்களிடம் பத்து வருடம் தேவாரம் கேட்டு நமச்சிவாய போட்டு அப்படிச் செய்வேனு சிவா சிவா சிவா* **(கன்னத்தில் போட்டுக் கொள்ளல்)**

**நாவ:-** *கசடன் - கயவன் - அயோக்கியப் பதர் - நமது மோதிரம், பட்டு, கடுக்கன், மாலேகளேக் களவு செய்து எங்கே கொண்டு போய்க் கொடுத்தாய். சொல்.*

**(இப்போது திடீரென்று சோம்பு ஓட்டமெடுக்கிறன். அவனைப் போலீஸ்காரன் பிடித்துக்கொள்ளுகிறன்.)**

**நாவ:-** உனது திருட்டு முழியே சொல்லுகிறதே போலீஸ் இவனை - ஸ்டேசனில் கொண்டு போய் விசாரியும்.

**சாமி:-** ஐயோ - சாமி - நான் சாது. ஏதோ தங்களுக்குத் தொண்டு செய்து சிவ சிவா என்றிருக்கிறேன். நான் யாதுமறியேன். என்னை இப்படி செய்யலாமா?

**நாவ:-** சாதுவா சாமி நீ சாமி நீறு பூசிய உருத்திராக்கப் பூனை ஆஷாட பூபதி..... புறங்கூறும் புல்லன்; எதிர் பேசும் இறும்பன்; அகங்கரிக்கும் அசடன்; உன்னை இத்தனை நாள் பொறுத்தோம். "அடியார் என்னைக் கடியார்" என்று பகடி பேசினை. திமிராக நடந்தாய்...இன்று சிக்கிக் கொண்டாய். செய் தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமை யானுங் கெடும். ஹே 144 தீட்டு.

**144:-** டே சோம்பு.. சொல் உண்மையை நாவலர் பெருமானின் நகைகளை எங்கே விற்ருய் சொல் கூட்டுக் களவாணி.

**சோம்பு:-** ஐயா என்னை விட்டுடுங்கோ . சொல்லுகிறேன்...மோதிரம் இரண்டும் முத்தம்மா வீட்டில் நாலு முத்தத்திற்கு வைத்தான். மற்ற நகைகள் காசுக் கடையில். நான் பங்கு கேட்டேன், தரவில்லை. அதுதான் தகராறு.

**144:-** *154 ஒடு, ஒடு கிட்டத்தான். உளவு பார்த்துக் கொண்டா...எல்லாம்* **(154 ஓடுதல்)**

**144:-** *டே சாமி...சாணி . சாமி உள்ளதைச் சொல்லுகிருயா சுடட்டுமா...*

**சாமி:-** *நானில்லே அவன்தான்*

**சோம்பு:-** *நானில்லே அவன்தான்*

**(வருதல் 154 நகையுடன்)**

**154::-** *இதோ சிவப்புக் கல் மோதிரம், பவுத் திரமாகக் கிடைத்தது. அதோ காசுக் கடையிலிருந்து கடுக்கன், மாலே*

**144:-** *ஏண்டா பயலே நாடு வணங்கும் நாவ லரிடமா நீ இப்படி நடப்பது? இவ்வளவு பெரியவரிடமிருந்து நீ திருந்தவில்லேயே... போ சிறைக்கு போடா சோம்பு . வீம்பு*

**சாமி:-** *ஐயா, ஐயா என்னே விட்டிடுங்க இனி ஒழுங்காயிருப்பேன்.* **(நாவலர் காலில் விழுந்து)** *ஐயா நீரே என் தெய்வம் என் குரு — எத்தனேயோ பிழை செய்தேன் பொறுத்தீர் - நான் செய்த அபசாரங் களுக்கெல்லாம் இன்று தண்டனே கிடைத் தது...இனிப் பாப வழியில் நடக்கமாட் டேன்...என்னேக் கைவிடலாகாது.*

**நாவ:-** *பயலே...கவனம் பழி விடாது. பாவம் பொல்லாதது. தீயவர் கெடுவர். அதர்*

மம அழிககும காமம கலககும விப
சாரம வீஞுககும பஞசமாபாதகம உன
னேப பாழாககியது இநதா திருககுற
ளும, திருவாசகமும சிறையில படி நீ
வெளிவநத பிறகு உனனேச சோததுக
கொளகிறேன உனனேப பிடிதத ஊதா
ரிப பேய ஒழிக! நீ திருநதி வா போ
பஞசாடசரததை மறவாதே இநதா திரு
நீறு'

சாமி - ஹா குருவே - என பிழைகளே மனனிதத
கருணேயே என வினே எனனேச சுட
டது சிவகுருவே சிறையிலிருநது புதிய
மனிதனுக வநது உமது தொணடு செயதே
வாழவேன

சோமபு'- அயோககியா உனனுலே நான கெடடேன

சாமி - கயவா உனனுலே நான கெடடேன

(இருவருககும இரணடு அறை கொடுததுப
போலீசார இழுததுச செலலல இருவரும அழு
தல)

சாமி - நாவலா உனனே நான மறககினும
சொலலு நாம நமசசிவாயவே.

போலீஸ -சாமி உததரவு திருநீறு தாருஙகள

நாவ - (திருநீறளிதது) நம: சிவாய!! உலகம
பாவக காடானது ஐயோ சிவநெறி தபபி
அவநெறி புகும மாநதரை என செய
வது இபபடி எததனேயோ போா புரியு
வேணடியிருககிறது

கடுஞ் சொல்லின் வம்பரை ஈனரைக்
குண்டரைக் காமுகரைக்
கொடும் பவமேசெயு நிர்மூடர் தம்மைக்
குவல யத்துள்
நெடும் பனை போல வளர்ந்து
நல்லோர் தம் நெறியறியா
இடும்பரை ஏன் வகுத்தாய் கச்சி
ஏகம்பனே.

உண்மையை உலகம் எதிர்க்கிறது! ஐயா சிவதீட்சை பெற்றவரே கோவில் வழி பாடு செய்யத் தகும் என்று சாத்திரம் காட்டினுல் தீட்சிதருக்குக்கோபம். என்னை எதிர்த்து அவதூறு பேசினுர்...அவதூறு வழக்கில் ஒரு பாவலர் சிக்கினுர். ஐயா பதிப் பாடல்களையே பாடுங்கள் என்ருல் புதுப் பாவலர் கூட்டம் குமுறுகிறது. இலஞ்ச வஞ்சகர் கொடுமைகளைக் கண் டித்தால் அங்கே துவைஎன் துரை சீறு கிருன். நமது சிவ சமயத்தைப் போற் றினுல் எதிரிகள் தூற்றுகிருர்கள். ஐயா கல்லூரி நாட்ட வேண்டும் என்ருல் காசு கொடோம் என்கிருர்கள். என்னே உல கம் ..என்னே மாந்தர் மனப்புயல்.

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக்
கனவிலும் மெய்
சொல்லார் பசித்தவர்க் கன்னம்
கொடார் குரு சொன்னபடி
நில்லார்; அறத்தை நினையார்;
நின்னும் நினைவிற் சற்றும்
இல்லார் இருந் தென்ன போயென்ன
காண் கச்சி ஏகம்பனே.

**(தபால்காரன் கடிதம் தருதல்: நாவலர் அதைப் பிரித்துப் படித்தல்)**

*தெய்வ சிகாமணிப் புலவர் எழுதியுள்ளார் - நாளை இங்கே வருவாராம். ஒரு விவகாரம் தீர்ந்து விடும். இது பொன்னம்பலம் இராமநாதர் கடிதம் - யாழ்ப்பாணத்திற்கு உடனே செல்ல வேண்டும்... அங்கே சனங்கள் படும் துன்பம்; துரையின் அட்டகாசம். தேர்தல் அமளி... இது பொன்னுத்தேவர் கடிதம். இராமநாதபுரம் அலுவலை மதுரை செல்லும் போது வைத்துக் கொள்வோம்; முதலில் புலவரைக்காண்போம்.*

**(செல்லல்)**

# 18. நாவலர் உள்ளம்

**பாத்திரங்கள்:-** தெய்வசிகாமணி, நாவலர்)

**(எனது தமிழாசிரியர் தெய்வ சிகாமணிப் புலவர் இராமலிங்க சுவாமிகளுடன் இறுதிவரை இருந்தவர்; நாவலருக்கு நெருங்கிய நண்பர்: திருவாவடுதுறை வித்துவான்.)**

**தெய்வ:-** *அவரும் நண்பர்; இவரும் நண்பர்; அவர் அருட் பாவலர் அருட் சோதி தெய்வம் என்னை ஆண்டு கொண்ட தெய்வம் அம்*

பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம். இவர் அருள் நாவலர்; இருவரும் நடராஜ பக்தர்; இருவரும் திருவாசக ரசிகர்; வடலூர்பிள்ளையும் சிவநேசர்; நல்லூர் பிள்ளையும் சிவநேசர்; அவரது பாடல் நெஞ்சை உருக்கும். இவரது பணி நலம் உள்ளத்தை அள்ளும். அவர் சமய மறுமலர்ச்சி தந்தார். இவர் சமய சஞ்சீவியாக எழுந்து வேதாகமச் சைவத்திற்குப் புத்துயிர் கொடுத்தார். ஐந்தெழுத்தைக் காத்தார்; உறங்கிய தமிழரை எழுப்பினுர். தமிழும், சைவமும் வளரப் பல கருவி நூல்களை வெளியிட்டார். பள்ளிக் கூடங்கள் நாட்டினுர். அச்சிலும் மேடையிலும் அஞ்சாச் சிங்கம் போல் எழுந்து கர்ச்சித்தார். பழைய சித்தாந்தத்தைப் பாவித்தார். ஐந்தாங் குரவர் எனப் புகழ் பெற்றுர். வடலூரார் சத்திய ஞான சபை அமைத்து ஜோதி துலக்கிச் சாதி மதச் சழக்கை விட்டுத் தூய சமரசங் காட்டினுர். சாதுவாக அடங்கியிருந்தார். நாவலரின் வித்தகப் புலமையும்; பாவலரின் இயலறிவுப் பொலிவும் நாட்டிற்கு வேண்டும். இருவரிடையே புகுந்த விவாதத்தை இன்றுடன் தீர்த்து அமைதி சேர்ப்போம்.

**(நாவலர் வருதல்)**

**நாவ:-** ஓம் சிவம் வருக வருக

**தெய்:-** ஓம் சிவம் அருட்சோதி வாழ்க!

நாவ :- இராமலிங்கப்பிள்ளை நலமா. தங்கள் கடிதம் வந்தது.

தெய் :- இரு புறமும் நலமே. செந்தமிழ் நாவலரே; நீர் சைவ சமயக் காவலரே; இருண்ட தமிழகத்தில் சிவ தீபத்தை ஏற்றி வைத்தீர்; வடலூரர் வள்ளல் அருட்பாவால் ஞானசோதி துலக்கினார். இருவரிடையும் புகுந்த வழக்கு இன்றுடன் தீரட்டும். உலகிற்கு நலஞ் செய்யும் உத்தமர் அமைதியாக அவரவர் பணி நலன் பேணட்டும்.

நாவ :- அது தானே நாம் வேண்டுவது...பாடட்டும் ஆடட்டும். அருள் கூடட்டும். ஆனால் பழி தூற்றல் விடட்டும்.

தெய் :- வள்ளலார் பழிச் சொல் வழங்க மாட்டாரே. தங்கமேயனையார் கூடிய, சமரஸ சங்கமே கண்டு, அதற்கொரு ஒளி மன்றம் நாட்டி, அதில் அருட் பெருமானைப் பாடியாட ஆர்வங் கொண்டவர் வள்ளலார். அவர் சுத்த சிவ சன்மார்க்க நமச்சிவாய என்று இடு நீறே என்கிறார். சாதி, சாதி என்றலையும் காலத்தில் சோதி சோதி என்ற மந்திரநாதம் எழுப்பினார். அவரது மகாதேவமாலையைப் பார்த்திருப்பீர்கள்.

நாவ :- இறைவனைப் பாட எல்லாருக்கும் உரிமையுண்டு. ஆம்; நாமும் பாடுகிறோம். கவி புனைகிறோம்; குயிலுக்குக் கூவ உரிமையுண்டு; பேய்க்கும் பேச உரிமையுண்டு.

பாவலனுக்குப் பாட உரிமையுண்டு. புதிய பாடல்களின் மோகத்தில் அருள் பழுத்த திருவாசகம்; திருமுறை நூல் கள் மறைந்துவிடக்கூடாது. நாம் சைவர்; நமது சைவ ஒழுக்கத்தை நாம் பேண வேண்டும்; சைவக் கருவூலங்களைப் பாது காக்க வேண்டும். நமது சைவ சமயத் தை விட்டால், பரசமயம் படரும். நம் மவர் அருகுவர்; பரசமயிகள் பெருகுவர். தெரிகிறதா?

**தெய்:-** நன்ருகத் தெரிகிறது - நடராஜனைத் தலைக் கொண்டே வள்ளலார் பெருமா னும் திருவாசகம் படித்து உருகி நிற்கி ருர். சன்மார்க்க சமயத்தை வளர்க்கி ருர். திருமூலரும், மாணிக்கவாசகரும், கொண்ட கருத்தையே அவர் நிறைவேற் றுகிருர். **சோதி வணக்கம் துலக்கிருர்.**

**நாவ:-** புலவரே சோதி வணக்கம் புதிதல்ல; உள் நாடிப் பார்த்து உணர்ந்திட வல்லார்க் குக் கண்ணடி போலக் கலந்திருந்தானே சோதியே சுடரே. அருட்பெருஞ்சோதியே! என்று நமது அருட் புலவர் பாடினர். மாணிக்கவாசகரின் இன்றெனக்கருளி - சோதியாய்த் தோன்றும் உருவமே அரு வாம் ஒருவனே என்ற பாடல்களின் சாயலே இராமலிங்கர் பாடல்களிற் காணும். திருமுறை நூல்களை ஓதி எல் லாரும் நமது திருநெறிச் சைவத்தில் ஒழுகி, திருநெறித் தொண்டராக வாழ

வேணடும எனபதே நமது விருப்பம இதறகே நமது வாணுள முழுவதும ஈநதோம

தெய் - தஙகள பெருமையும, தியாகமும உலகப புகழபெறறவை உலகினபஙகளைவெறுதது தூய பிரமசரியங காதது சிவ பூசையும, சிவ சேவையுமாயிருககும தாஙகள வித தகச சிததரே

நாவ - புலவரே நான சிததனலலேன, சிததாட ஒும வேணடேன ஆணடவன செய யும அறபுதஙகளை அறப மனிதனுகிய யானே செயவேன?

தெய - தஙகள வாழவு அமரததனமை பெறறது

நாவ - அமரத தனமை பெறறது எது? இநத உடலா? இநத நர சரீரமா? ஐயையோ இநத பஞச பூத சரீரம நாளையே வீழும் எனபதைச சிறு பிளளையும அறியுமே இது சவம இதறகுள ஜீவன உளளது, அது சிவமயம! அநதச சிவமயமே எனது அமரத தனமை இது உணராது, உடமபை நிததியமாககும பேசசை நாம ஒபபோம - செததாரை எழுபபும மாயத் தையும ஒபபோம

தெய - நாவலரே குறிபபுணாந்தேன நிததிய தேகம எனபது இநதப பஞச பூத சரீ ரமனறு, காறறுலும கூறறுலும அழிகக முடியாது பிரணவ சரீரம, சுறறுடல சிவஜோதியுடன, அதையே நிததியதேகம்

எனபது இநதச சிவஜோதி யுணாவில
லாமல சவ வாழவு வாழும அஞஞானி
களே செததார் - சததறியாது செததாா.
அவாகளை ஞானவொளி தநது சிவசை
தனயததை உ ண ர எழுபபுவதுதான
செததாரை எழுபபுவதாகும இதைத
தான வளளலாா துரியமலை மேலுளள
சோதி வளநாடடில கூடடி அறிவு செத
தாரை எழுபபுவது எனறாா இதைக
கணணார விளககவே அவா ஏழு திரை
போடடு அதறகுப பினனே கணணாடி
விளககும துலககினாா

**நாவ** - திருவாசகம, திருமந்திரம வழிசசெனறு
அனுபவங கணட ஞானிகள மககளைச
சிவ சைதனயததிறகு எழுபபுதல சிறப
புததானே உமது விளககம சரி

**தெய** - மககள இனனும வளளலாரை அறிய
விலலை அவரும கடையை மூடிவிடடாா
இபபோது அகணட மௌனியாகி மேடடு
குபபம குடிலில தியான சமாதியில ஆழந
திருககிறாா ஆதலால மறற வழககுகளை
அவா நினைபபதிலலை

**நாவ** - மிகக மகிழசசி - இதோ நமது வழககை
நிறுததி விடடோம நமது வககீல செலவ
நாயகப பிளளைககு எழுதிவிடடோம இனி
விவகாரமிலலை

**(தநதி வருகிறது - நாவலா உடைததுப பாாக
கிறாா )**

இதோ பொன ராமநாதா தநதி, உடனே
யாழபபாணமசெலகிறோம. சாமி மூடடை
கடடு

சாமி - உத்தரவு குருநாதா - உணவு தயாா
வருக

(வணஙகுகிறுன)

தெய - ஓம சிவ ஜோதி (செலலல)

# 19. மாத்யூ நவீனம்-துவைனன் துரை

பாததிரஙகள - மாதயூ நவீனம, துவைனனதுரை

மாதயூ -

ஆஙகிலத தொபபிககும பூடசுககும அடியேன
அதிகாரத துரையின அடியாாககும அடியேன
நீஙகாத ஏ, பி ஸி டி தலையெழுததுககு அடியேன
நெகடைககும காலருககும நேரான அடியேன

மூளை இபபடியும அபபடியும போகிறது
ஒரு பககம வயிறு - துரை இனனொரு
பககம சைவம — நாவலா - பா
ஸிவேலுககுப பிறகு துவைனன துரை
யைப் பிடிததுத தொஙகி ஒரு வேலை
கிடைததது நமதுபககம தியாகு, விசுவநா
தாநாவலாமருமகனதாககுடாரதலுதாரி /
இனனும பலா — நாவலா பககம் பெரிய

பெரிய இந்துக்கள். நான் அவர்கள்முன் தலைகாட்ட முடியவில்லை. இருந்தாலும் துரையிருக்கு மட்டும் என்ன குறை-நாவலர் துரையைக் கண்டித்து விளம்பரங்கள் செய்கிறார்.. துரை பல்லைக் கடிக்கிறார்.

துரைமாரின் புகைக்கும் டாம்பூலுக் கடிமை
தூங்காநல வயிற்றுக்கும் துட்டுக்கும் அடிமை

(பின்னால் துரை)

**துரை :-** , டாம்ஃபூல் இடியட், யூ...மாத்......
யூ...மாத்யூஃபூல் ..கம்... இடியட்

**(மாத்யூ ஓடிப் போய் மண்டி போட்டு சலாம் செய்தல்)**

**மாத் :-** குட் ஈவினிங்...ஸார் . தை ஹம்பில் ஸெர்வண்ட் **(சிலுவை போட்டு)** அடிமை அடிமை

**துரை :-** **(புலிப் பார்வையுடன்)** என்ன மான் இப்படி – இதைப்படி **(முகத்தில் எறிகிறான்.)** லாங்டன் துரைக்குப் புகார் பண்ணினான்.

**மாத் :-** துரையே இந்த அஞ்ஞானி அப்படித்தான் எல்லாரையும்தாக்குவான்பதினாயிரம்மைல் தூரத்திலிருந்துவந்து, இந்தத்தீவில் எவ்வளவோ கஷ்டப்பட்டு, துரை எத்தனையோ நன்மை செய்வதை நாங்கள் அறிவோம். ஆனால் அஞ்ஞானி அவதூறு எழுதினான். அதைப் படிக்கவும் எனது நாவு கூசுகிறது.

துரை - என்ன மான சொன்னுன .1,2,3,4,5 இப்படி பாயினடு பாயினடா சொலலு மான

மாத - கருணையுள்ள துரையே கேளுங்கள

(1) நாடெஙகும மழையிலலை பஞசம, வறுமை, வரடசி - கஞசித தொட்டி கூடச சரிவர நடககவிலலை

(2) எஙகும காலரா, பேதி, கொளளை நோய ஊரைச சூறையாடுகிறது - நோயா ளரைக கவனிபபாரிலலை

(3) வரிதான ஏறுகிறது, மககளுககு வசதியிலலை

துவை - டாம - மூளை சானி — டுரை மேலே இப படிப புகாா — நீ சநதோஷமாகப படிககி றுன—ஃபூல

நவீ.- இலலை துரையே அழுது கொணடே படிக கிறேன'காலராவுககு மருநதிலலை ஏழைக குடுபஙகளை துரை எரிககிறுா தககா ருககு வேலையிலலை தாதருககே வேலை, உம உம உம லஞசஊழல கொஞச மலல — உஹூம ஊம

துவை - நிறுதது போதும உம உம - பளடிஃபூல் கேள - கவனம கிரிகரி (Gregory) துரை விசாரணைககு வருகிறுா நம ஆளகளிடம சொல - சாடசி தயாரி - சனஙகளிடம

கையெழுத்து வாஙகி வா.. எனன தெரி யுமா

நவீ,- துரை சிததபபடி அடிமை நடப்பேன் துரை ஆடசியில் குறைவேயில்லை — எல் லாம சரியாகவே நடககிறது.

துவை - ரைட அப்படிச சொலலு. துரைககு அனபு அதிகம. மககள நன்மையே துரைககு மூசசு

நவீ.- துரை நியாயமான வரியே போடுகிறா

துவை - ரைட சரியானபேருககே உததியோகம்தரு கிறா

நவீ - ஆம தருகிறா.

துவை - கொஞசமும லஞ்சமிலலே.

நவீ - கொஞசமா இலலே

துவை - ரைட - பேதி காலரா, பிளேக்

நவீ - காய்சசல கழிசசல எதுவும் இலலே. வந் தாலும உடனுடன - மேலே அனுபபு வாா

துவை - ரைட - சொலலு போ-சவரிமுதது, மணி யககாரா, கசசேரி முதலியாா, விசுவநா தன எலலாருடனும வேலே செய போ- அஞஞானி அறிக்கை - கிலசு கிலசு போடு- (இழிககிறா )

**நவீ** - துரையே அடியேன பிளளை குடடிககாரன. அஞ்ஞானி கடசி பலம பொன ராம நாதன போனற பெரிய பெரிய ஆடகள.

**துவை** - சடட சபைககு நிற்கிருரே அவா தாமே அவருககு எதிராக பிரிடடோவை நிறுதத யுளளோம நீ பிரிடடோவுககாகபபேசு-

**நவீ** - அநதப் பககம நாவலா நாவாடுகிறது. துரையே வணணாபணணை சைவபபிர காச விததியாசாலையில கூடடம போடு கிருாகள - துரையே எதிாபபு அதிகம - உம உம

**துவை** - என்ன மான வேணடும் - இநதா இரு நூறு

**நவீ** - போ.. தா.. தே

**துவை** - இநதா முனனூறு

**நவீ** - துரையே நா இருநதாலே நாவை வெவ் வோம.. நா னூ று

**துவை**.- சரி...போ . காரியததை முடிதது வா

**(வருதல விசுவநாதன)**

**விசு** - துரையே தோதல நடந்தது பொன் ராமநாதன வெனருா ஊரெலலாம ஒரே குமமாளம. நாவலா பேசுகிருா...

**துவை** - அ . ல லா ஸ
ஆல - லாஸ .

# 20. பொன்னம்பலம் வெற்றி

**பாத்திரஙகள - நாவலா, பொனனமபலம ராம நாதன, பொதுமககள )**

**(பொனனமபலம இராமநாதன தோதலில வெறறி பெறறா அவருககாகவெறறிக கூடடமநடக கிறது அவருககுமாலைசூடடிமரியாதைசெயகிறாகள - நாவலா பேசுகிறா பிததா பிறை சூடி எனற தேவாரம முழஙகுகிறது.)**

எல் - *பொனனமபலம இராமநாதா வாழக! வாழக!*
*ஆறுமுகநாவலா வாழக! வாழக!*

நாவ - *பொதுசனஙகளே, இனறு நமககெலலாம மகிழவுககுரிய நாளாகும நமது தாய மொழிககும சைவ சமயததிறகும அரிய பணி செயத பொன ராமநாதா சடட சபைககுச செலலுகிறா*

*உளளத துடிபபில உலகந துடிபபவரைத*
*தெளளத தெளிநதுடனே தோ*

*எனற நியதிபபடி மககள நலமே அவா உளளத துடிபபு சடடசபையில நமது இராமநாதா பொதுநலத தொணடுகள பல செயவாா எனபது உறுதி இநதக கால நிலை சீா கெடடிருககிறது மககள தமது திருநெறிச சமயததை மறநதனா பர சமயப பறறில உழனறனா அரசாங கம அதன சமயததை வளாபபது இயலபு தான நமது தமிழும சைவமும ஆதர*

வறறன. பொதுசனஙகளே விழித்துக
கொளளுஙகள் துவைனன் துரையின
திருவிளையாடலகளை நீஙகள அறிவீாகள
நாடெஙகும பஞசம, லஞசம, வறுமை,
வரடசி. தககாருககு ஆதரவிலலை செல
வப பிளளைகளுககுச சலுகை அதிகம
நோய நொடிகள நாடடை உணகினறன
சரியானசிகிசசைசெயயவேணடும கலவித
துறையில கவனமான சீாதிருததம வேண
டும நமது சமயபபணபாடடினஅடிப்படை
யில கலவி யமைய வேணடும சமயத
தை இழநதால சகலமும இழபபோம
நமமவா நமது சமயததில உரஙகொண
டிருநது வளாகக வேணடும சமயவுணா
வுடன கலவி புகடடப பொன இராம
நாதா இரணடு கலலூாிகளை நடததுகி
றாா நாமும இஙகும சிதமபரததிலும
கலலூாி நாட்டியுளளோம நமது நற
பணி இருகக அரசாஙக ஆதரவும வேண
டும நமது குறைகளை எடுததுரைததுப
பாிகாரம தேடவே பொன இராமநாதா
அஙகே செலகிறாா அவரை எலலாரும
வாழததுவோம பரமசிவன அவருககு
அருள பாலிபபாராக. நம பாாவதீ
பதயே

சனங - ஹர ஹர மஹாதேவ

**பொன** - என குருநாதரான நாவலரே, வணககம,
சகோதர சகோதாிகளே வணககம இனறு
எனககு நீஙகள செயத மாியாதைகளெல
லாம எமமையாளுடைய சிவபெருமா
னுககே ஆகுக அவன மயமான, சிவ
மயமான ஆனமாககளுககுத தொணடு

செயயவே நாம சடட சபைககுச செல கிறேம நாடடின குறை நிறைகளை நன கறிவோம பொது நலததிறகும நமது சமயததிறகும உரிய பணிகளையே அஙகே நிறைவேறறுவோம நமககுப பெரும பேறுக ஆணடவன அனுபபிய ஐந்தாங குரவா ஆறுமுகநாவலா. அவா தமது நூலகளாலும ஆகக வேலைகளாலும தமி ழுககும சைவததிறகும அளவறற நலம புரிநதாா. இனறு நாம திருநீறு பூசிப பஞசாடசரம ஜபிததுக கோவில வழி பாடு செயகிறேமெனருல அதனபெருமை ஆறுமுக நாவலரைச சேரும இனறு யாழபபாணததில மூனறு பெரிய சைவக் கலாசாலைகள எழுநது விளஙகுவது அவ ராலே தாம சிதமபரத்திலும சென்னை யிலும அவா செயதுளள கல்விப பணி யும சமயப பணியும அறபுதமானவை இனறு நாம தோநதெடுககப படடதும அவா ஆசியால. அவருககு நாடு முழு தும தலை வணஙகுகிறது மனனரும செலவரும சிறப்புச் செயகின்றனா. இதோ பாணடி நாடெஙகும நாவலா ஞானசமபநதா குருபூசை நடத்திச சிவா மிாதம பொழியப் போகிறுா. குனறக குடி ஆதீனமும, மதுரை ஆதீனமும, சேதுபதியும அவருககு இராசமரியாதை செயயப் போகிறுர்கள

**பொது** - நாமும் நாவலருககுச சிறபபுசசெயவோம.

**பொன.**- பொதுசனஙகளின சாாபாக இநதக கண டிகையை அவருககுச சூடுவோம (**சூட் டுதல - தேவாரம**)

ஊனுய உயிரானுய உடலானுய உலகானுய
வானுய நிலனஆனுய கடலஆனுய மலையானுய
தேனுா பெணணைத் தெனபாலவெணணெய நலலுராஅருட
ஆனுயுனக காளாயினி அலலேன எனலாமே (டுறையுள

# 21. ஞானசம்பந்தர் திருநாள்

பாத திரஙகள - பொனனுசாமிததேவர், நாவலா, திருவண்ணுமலை ஆதீனம, பொதுமககள.

(நாவலா ஞானசமபநதர் படத்தைதத தாஙகிப பலலககில வீறறிருககிறுா மேளதாளத்துடனதேவாரம முழஙகுகிறது)

எல் - ஆதியநத மாயினுய ஆலவாயில அணணலே
சோதியநத மாயினுய சோதியுளளோா சோதியாய
கீதமவநத வாயமையால கிளாதருககினுாக கலால
ஒதிவநத வாயமையால உணாநதுரைக கலாகுமோ

வீடலாலவாயிலாய—

(பலலககு இறக்குதல் - நாவலருககுப பொது மககள மாலை சூடடி வணங்குதல்)

பொன் -(தஙக உருததிராடசம அணிவிததது) பொது மககளே சைவபபெருமக்களே, — இனறு ஞானசமபநதா திருநாள ஞானசமபநதா கோலததைதயே கணடோம இதே மதுரையில் சமணரை அனல வாதிலும, புனல வாதிலும வெனறு சமபந்தா சைவக கொடி நாடடினுா இநதககாலம

பரசமயக் கோளரியாக வந்து நமது நாவலர் சைவக் கொடியை நாட்டினுர். நாவலர், நக்கீரரும் அப்பரும் சேர்ந்த திருவடிவம்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர். அவரிடம் நமக்கு அளவற்ற அன்புண்டு. அவர் வெறும் எழுத்தாளரன்று. புத்தகம் போட்டு விற்பவர் அன்று. இவ்வாறெல்லாம் சிலர் சொல்லிப் பிறகு வருந்தினர். நாவலர் பொன் புகழைத் துரும்பென மதிப்பவர். நமது இராமலிங்க விலாசத்திற்கு அழைத்தோம்; வருந்தி வருந்தி அழைத்த பிறகே தலை நிமிர்ந்து அங்க வேட்டியுடன் அரசர் போல வந்தார். அரிய சொற்பொழிவாற்றினுர். நாம் தந்த பரிசிலைக் கூடப் பெற்றுக் கொள்ளவில்லை முற்றிலும் சுயநலமற்ற இந்துத் தியாக வீரர் நீடு வாழ்க! (கரகோஷம்)

நாவ:- சைவப் பெருமக்களே - இன்று நமது குருநாதர் ஞானசம்பந்தர் திருநாள். இன்றுதான் எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிய நாள். இன்றைப் போல என்றும் நாம் சிவநாம அலையில் இன்ப நீராடுவோமாக. பொதுமக்களே விழித்தெழுங்கள். நாம் மானமாக வாழ்வோமானுல், நமது நாடு தீனமின்றி மேன்மை பெற வேண்டுமானுல் நமது அருட்சமயத்தைப் போற்ற வேண்டும். நமது சமயம் சைவம், நமது கடவுள் சிவம், நமது

சமயநூல் திருக்குறள், திருவாசகம், நமது சமயகீதம் தேவாரம்; நமது உள்ளம் திருவாசகமாகும். நமது உடல் வாழ்வு திருக்குறளாகுக. நமதுசமய குரவர் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்.

**எல்;-** நாவலரும் ஆவார். (கரகோஷம்)

**நாவ:-** என்னைச் சமய குரவராக ஏற்றதால் நான் சொல்லியபடி நீங்கள் நடக்க வேண்டும். ஒவ்வொருநாளும் ஒரு மணி நேரமாவது தேவார திருவாசகங்களை ஓதுங்கள். திருக்குறளை மனப்பாடம் செய்யுங்கள். பஞ்சாட்சர செபம் செய்யுங்கள். திருக்கோயில் புகுங்கள். வெள்ளிக்கிழமைதோறும் கோவில்களில் எல்லாரும் கூடி பக்திப் பாடல்களைப் பாடி வழிபாடு நடத்துங்கள். தக்க புலவர் சமய விளக்கம் செய்யக் கேளுங்கள். சமய ஒழுக்கத்தை எமது பாலபாடங்களிலும், சைவ வினுவிடையிலும் விரிவாகச் சொல்லியிருக்கிறோம். அவற்றைக் கற்று நில்லுங்கள். உங்கள் குழந்தைகளுக்குச் சைவ ஒழுக்கங்களைப் பயிற்றுங்கள். பள்ளிக்கூடங்களில் சமய வ்குப்பு நடத்துங்கள். அப்பரும் சம்பந்தரும் அரும்பாடுபட்டு நாட்டிய சமயத்தை நாம் வாட விடலாமா?. விழித்தெழுங்கள் — வீறு பெற்று நில்லுங்கள் - ஓம் நமச்சிவாய என்று சொல்லுங்கள் — எல்லோரும் பாடுங்கள்.

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
***மிகநல்ல வீணை தடவி***

*மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்*
*உளமே புகுந்த அதனுல்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்*
*வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே*
*ஆசறு நல்லநல்ல அவைநல்ல*
*அடியா ரவர்க்கு மிகவே.*

**திருவண்ணுமலை ஆதீனம்:-** *(பட்டுப் போர்த்தி)*
*ஆறுமுக நாவலர் அருட்பணி வாழ்க!*

*உண்ணுமுலை உமையாளொடு முடனுகிய ஒருவன்*
*பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ*
*மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்*
*அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே*

*ஈன்ருய் முதலொன்ருய் இருபெண்ணுள் குணமூன்ருய்*
*மாருமறை நான்காய் வருபூதம் மவைஐந்தாய்*
*ஆருர்சுவை ஏழோசையொ டெட்டுத் திசைதாணுய்*
*வேருயுட ஞனிடம் வாழும் மிழலையே.*

## 22. நாவலர் வாழ்க!

**பாத்திரங்கள்:- நவீனம், விசுவநாதன்.**

**(நவீனம் - விசுவநாதன் மனம் மாறி நாவலரைப் புகழுதல்.)**

**விசு:-** *மிஸ்டர் நவீனம் மாத்யூ.*

**நவீ:-** *டே என்னை இனி அப்படிக் கூப்பிடாதே நான் பழைய பரமசிவம் பிள்ளை என்று கூப்பிடு...எனக்குப் புத்தி வந்தது...*

விசு:- ஆம், ஆம். நானும் மனம் மாறினேன். நாவலர் சொல்லும் செயலும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. சிவதூஷணை செய்த எனது நாவைச் சுட்டுக் கொண்டேன்- நாவலரைச் சரண் புகுந்தேன். அவரது நூல்களை ஓதிப் பயன் பெற்றேன்...

நவீ:- நமக்கு அவ்வளவு மூளையில்லை - நாவலர் பின்னால் போன இடங்களி லெல்லாம் நல்ல பொங்கல் வடை பாயாசத்துடன் சாப்பாடு. நல்ல தேவார முழக்கம் நல்ல தூக்கம் பார். ஊர் முழுவதும் நாவலர் திருவிழா - நாவலர் பவனி வருகிறார். வீட்டுக்கு வீடு ஆலத்தி - மாலை காணிக்கை - உண்டியல். அடடா உண்டியல் பெட்டியை என்னிடம் தந்தால்.

விசு:- உன் உண்டிப் பெட்டிதான் நிரம்பும்... சரி பேச்சை நிறுத்து. அதோ பவனி கிட்ட வருகிறது...இனிச் சிவநாமம்சொல்,

இரு:- ஹர ஹர ஹர ஹர மஹாதேவசிவ, பார்வதி ரமணா சதாசிவா.

(வருதல் மேளதாளங்களுடன் நாவலர் பவனி)

நற்றமிழ்க் குரிசிலான் நாவலர் வாழ்வைப் பாரீர்
கற்றவர் புரிந்த தூய கலைவளர் பணிகள் பாரீர்
பெற்றதாய் மகிழவந்த பெருந்தகைப் புலவன் அன்னான்
மூற்றறி வாளன் ஆறுமுகனருள் வடிவினனே..

வாழ்க வாழ்க சிவத்திரு நாவலர் வாழ்க வாழ்க. (ஆலத்தி யெடுத்தல்)

# 23. நவீனம், விசுவநாதன்

**பாத்திரங்கள்:-** நவீனம், விசுவநாதன்.

(நாவலர் படத்திற்கு முன்)

**விசு:-** இப்போதுதான் உணர்ச்சி வந்தது.

**நவீ:-** இப்போதுதான் எழுச்சி வந்தது, நமது சமயத்தை நாம் போற்ருவிட்டால் நாம் நலிவோம்; நாடு நலியும்; நமது பண்பாடு நலியும். நானும் நாக்கை வளைத்து தமிழைக் கெடுத்து, துரை வேஷம் போட்டேன். எல்லாம் அடிமைக் கோலமானது...நாவலர் பாலபாடம் என்னைத் திருப்பியது.

நாவலர் அவரே என்போம்; நமது சைவாகமத்தின்
காவலர் அவரே என்போம! கனிதமிழ் அமுதம் ஊறும்
பாவலர் அவரே, எங்கள் பைந்தமிழ் உலகையாளும்
கோவலர் அவரே என்று கும்பிட்டு நிற்போம் யாமே.

**விசு:-** எனக்கு இரண்டு வடிவங்களே தெய்வமாக விளங்குகின்றன. (1) நடராஜப் பெருமான், (2) நாவலர் பெருமான்

வரம்பெறு வாக்கினனை வஞ்சமில் நெஞ்சினனை;
உரம்பெறு மேனியானை, உயர் சிவ சமயம் வாழ
வரம்பெறப் பணிசெய்தானை, வாழ்வெலாம் வேள்வியானை
பரம்பொருட் பற்றினனைப் பன்முறை வணங்குவோமே.

நவீ:- நாவலரைப் பார்த்து வெகு நாளாயிற்று. அப்போது துரையிடம்சிக்கிஇருந்தேன்-இப் போது ஒரு முரட்டு மனைவியிடம் சிக்கி நெருக்குப்படுகிறேன். ஆனாலும் அவர் திருவுருவை மனக் கோவிலில் நாட்டுகி றேன்.

*மாந்தளிர் மேனியானை மலர்விழி யழகினானைத்*
*தீந்தமிழ் வாயினானைச் செபமணிக் கையினானை*
*காந்தமிழ் சாரம்போலக் கவர்ந்திடுந் தோற்றத்தானை*
*ஏந்திசை பரவினானை என்னுளே வணங்கினேனே.*

நடுத்தரமான தோற்றம், வைதிகக்குடுமி, செம்பட்டு அணிந்து உருத்திராட்சம் பூண்டு திருநீறு பூசிய தூயமேனி, சிவம் சிவம் என்னும் நாவு, சைவம் வளரும் உள்ளங் கொண்ட நாவலரே உம்மை நான் கண்டு தண்டனிட்டு என் பிழைக ளுக்காக வருந்துவேனா? மனிதப் பிறவி யின் பயனைப் பெறுவேனா?

விசு:- யானும் பெறுவேனா...ஆறுமுகசிவனே!

# 24. நாவலர் சமாதி

**பாத்திரங்கள்:-** நாவலர், எல்லோரும்.

(நடராஜ விக்கிரகம் அழகாக அலங்கரித்து விளங்குகிறது. குஞ்சிதபத நிழலில் நாவலர் சிவக்கோலத்துடன் நிட்டை செய்தல். திருவாசகம் தேவாரம் முழக்கம்)

நாவ:-

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்,
தருவாய் சிவகதிநீ பாதிரிப் புலியூர் அரனே.

(திருநீறணிதல் - கண்மூடல்)

நம:சிவாய...நம:சிவாய...நம:சிவாய...

எல்லாரும்:- (எழுந்து விழுந்து பணிந்து)

அருந்தமிழ்ச் செல்வம் வாழ்க! அறம் பொருளின்பம் வாழ்க
பெருந்தகைப் புலவர் வாழ்க! பிறங்குக சைவநீதி
குருந்த நன்னீழல் வைகும் குருமணி வாழ்க எங்கள்
அருந்தவப் பயனாய் வந்த நாவலர் அன்பு வாழ்க!

(தீபாராதனை)

நாத விந்துக லாதீ நமோ நம
வேத மந்திர சொரூபா நமோ நம
ஞான பண்டித சாமி நமோ நம - வெகுகோடி
தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாலா நமோ நம- அருள்தாராய்.

வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணர் உள்ளந் தோறும்
சென்றுளே அமுதம் ஊற்றும் திருவருள் போற்றி! ஏற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்திடும்கோலம் போற்றி
மன்றுளே மாறியாடும் மறைச்சிலம் படிகள் போற்றி.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

நாவலர் நாடகம் முற்றிற்று.

ஓம் சிவம்